517

முரசொலி

வார இதழ் — மு. கருணாநிதி

முரசு 2 | 10—2—56 | வெள்ளி | ஒலி 45

★ "ஏன், கருடா சுகமா?" ★

பனி குவிந்த கைலாயத்தில் பரமசிவனார்- உமா தேவியாருடன் சரச களியாட்டத்தில் ஈடுபட்டிருந்தார். அவசரமாக ஓடி வந்த நந்தி தேவர், அம்மையும், அப்பனும் ஆனந்த நிலையிலிருப்பது கண்டு கண்களை மூடியபடியே வாய் திறந்து கத்தினார். "எம்மானே! பெம்மானே! திவ்ய தரிசனம் காணுவதற்காக விஷ்ணு மூர்த்தி எழுந்தருளியுள்ளார்" என்பதாக! தேவியின் கன்னத்தில் பதிந்திருந்த உதடுகளை எடுத்துக் கொண்டு, விஷ்ணுவை வரவேற்பதற்கு ஆயத்தமானார் சிவனார். விஷ்ணு மூர்த்தி, தனது வாகனமான கருடாழ்வாருடன் அரனாரின் அந்தப்புரத்தினுள்ளே நுழைந்தார். ஆடை திருத்தியபடி அம்மை வேறு பக்கம் ஒதுங்கிக் கொண்டார்கள். அரியும், அரனும் ஒருவரையொருவர் தழுவிக் கொண்டு 'குசலம்' விசாரித்துக் கொண்டு, பினனர் பேட்டியின் முக்கியத்துவம் குறித்து அளவளாவினர். அப்போது சிவனாரின் கழுத்திலே புரண்டு கொண்டிருந்த பாம்பை, விஷ்ணுவின் வாகனம் பார்த்தது. கருடனின் பார்வையைக் கண்டு, பாம்பு சிறிதும் அச்சமடையாமல் மிக அலட்சியமாக "என்ன கருடா! சுகந்தானா?" என்று க்ஷேமம் விசாரிக்கத் துவங்கியது. கருடனுக்கோ ஆத்திரம் தாங்க முடியவில்லை. வேறிடமாக இருந்து ஒரு பாம்பை கருடன் கண்டு விட்டால் சும்மா விடுமா? கால்களால் கிழித்து, அலகால் துண்டு போட்டு விருந்துண்டு மகிழக் கூடிய பறவை! பாம்புக்குப் பகை! கருடனின் நிழல் பட்டாலே பாம்பு கலங்கிச் செத்துவிடும் என்பார்கள். அவ்வளவு வலிமை வாய்ந்த கருடனை நோக்கி, பாம்பு கேட்கிறது "ஏன். கருடா; சுகமா?" என்று! பாம்பு இப்போது இருக்குமிடமோ, மிகப் பெரிய இடம்! கருடன், தன்னுடைய ஆத்திரத்தைச் செயல் மூலம் காட்ட முடியாத சூழ்நிலை; பாம்புக்குப் பதில் சொல்ல வேண்டும்! அந்தப் பதிலும் பொருள் நிறைந்த பதிலாக இருக்க வேண்டும்- இந்த முடிவோடு கருடன் விடை யளித்தது; "இருக்கும் ஸ்தானத்தில் இருந்தால் சுகந்தான்!" என்று! பாம்பு இருக்குமிடமோ பரமசிவன் கழுத்து. கருடனின் கால் நகங்கள் படமுடியாத இடம். அந்தத் துணிவிலே பாம்பு—கருடனைக் கேலி புரிகிறது; "ஏன் கருடா சுகமா?" எனக் கேட்டு!

இப்படி ஒரு புதிய புராணத்தை என் இளம் வயதிலே என் தந்தையார் கூறக் கேட்டிருக்கிறேன். அதையும், "ஏன் கருடா சுகமா?" என்று கேட்கக்கூடிய ஸ்தானத்திலே அமர்ந்திருக்கிற சிலரது போக்கையும் இணைத்துப் பார்க்கும்போது, பரமசிவனின் கழுத்தாக, பதவி நாற்காலியும்—பாம்பாக பக்தவத்சலம், சுப்பிரமணியர்களும் தோற்றமளிக்கிறார்கள் நமக்கு! பாம்பு, பரமசிவன் கழுத்தை சாஸ்வதமென்று நம்பியிருக்கிறது—அதனால் தன் உயிர் குடிக்கும் கருடனையே உதாசீனப் படுத்துகிறது! இது நடக்காத புராணத்தில்! ஆனால், இதோ, நாட்டு நிலையில், பதவியை சிரஞ்சீவித்தனம் கொண்டதெனக் கருதும் பைத்தியக்காரர்கள் பாம்பினுங் கொடிய பண்பு கொண்டு நஞ்சினுங் கொடிய வார்த்தைகளைக் கொட்டி வருகிறார்கள்.

தாய்த் தமிழகத்தோடு சேர வேண்டிய தேவிகுளம், பீர் மேடு முதலிய பகுதிகளைத் திருப்பிக் கொடு! ஆந்திரச்சீமையிலே இணைக்கப்பட்ட தமிழ்ப் பகுதிகளை எம்மிடம் சேர்த்து விடு! தட்சிணப் பிரதேசமெனும் முடிச்சு, வடவரின் கீழ் நம்மை நிரந்தர அடிமையாக்கும் முயற்சி!

—தமிழகத்திலே குமுறிக் கிளம்பியிருக்கும் இந்த அலை முழக்கம் கேட்டு, அரசு கட்டிலை அலங்கரிக்கும் பொம்மைகளாம்—ஆகஸ்டு முத்திரை பொறித்துக் கொண்ட அழகுப் பதுமைகளாம்-அமைச்சர் பெருமக்கள், சிம்மாசனத்தை நிரந்தரமாக நம்பி, நெருப்பு மொழிகளைக் கக்கி வருகிறார்கள்.

அங்கே நேருவிலிருந்து, இங்கே சுப்ரமணியம் வரையில். அதாவது காங்கிரசின் நுனி முதல் அடி வரையில், தங்களுக்குக் கிடைத்திருக்கும் இடம் யாராலும் பறிக்க முடியாதது — எவராலும் அழிக்க முடியாதது—எனப் பகற் கனவு கண்டு, அதன் விளைவாக உரிமைப் போர் நடத்துகிறவர்களைப் பார்த்து உறுமுகிறார்கள்.

"அவரே சொல்லி விட்டார்! அதனால் முடிவை மாற்ற முடியாது!"-சென்னை அமைச்சு கூறுகிறது இப்படி.

எவரே சொல்லி விட்டார்? நேருவே சொல்லி விட்டாராம்; அதனால் தேவிகுளம், பீர்மேட்டைத் திருப்பிக் கேட்பது குற்றமாம்—மிலேச்சத்தனமாம்—சிறு பிள்ளைத்தனமாம்.

அவ்வளவு பெரிய பணக்காரர்—அவரே கரந்தொட்டு இழுத்தார்—என்ன செய்வது, இணங்கி விட்டேன் என்றாளாம், கன்னத்தைக் காயப்படுத்திக் கொண்ட "கற்பரசி" ஒருத்தி! அந்தக் கதையாகத்தானிருக்கிறது; இந்த ..ள வந்த "உத்தமர்"களின் கதையும்!

கடவுளே சொன்னார் என்று கதைத்தவனை எல்லாம் காறி உமிழ்ந்து, ஆண்டவன் எழுதியிருந்தாலும் அதை அழித்து எழுதுவேன், என்று ஆவேசக் குரல் எழுப்பும் அறிவுலகத்திலே தான் இவர்களும் வாழ்கிறார்கள்; முல்லைக் காட்டில் கள்ளி போல!

பாவம்; அவர்களைச் சொல்லிப் புண்யமில்லை; அவர்களது ஸ்தானம் அப்படி! பரமசிவன் கழுத்திலே இருக்கிறார்கள். எப்போதாவது கீழே இறங்கித்தான் வர வேண்டும், அப்போது கருடனின் கூரிய பார்வையிலே பட்டுத்தான் தீரவேண்டும் என்கிற உண்மையைக்கூட உணர முடியாமல் தலை சுற்றும் போதை ஏறித் தவிக்கிறார்கள்! அதனால்தான் குரலிலே ஏளனம் தொனிக்கிறது, இறுமாப்பு முந்துகிறது, இழி சொற்கள் உதிர்கின்றன.

பதவி, ஈசற்பூச்சியின் சிறகைப் போன்றது. சில விநாடிகள்தான் உடலிலே ஒட்டிக் கொண்டிருக்கும் புற்றை விட்டுப் புறப்பட்டதும்! பின்னர், ஈசல், எறும்பாக மாறி பறவைகளின் இரையாக மாறி விடும். ஏதோ இருக்கும் வரையில் ஏசற் கணைகளை எறிந்து கள்பால் பூட்டி மகிழ்வோமே என்கிற அற்ப திருப்தி. மறைந்திருந்து தாக்க அழுத்தமானதும், அடர்த்தியானதுமான ஆலமரம் இருக்கிறது அதன் பின்னே ஒளிந்து கொண்டு அடுக்கடுக்

★ தொடர்ச்சி 6-ம் பக்கம்

★ ★

"அறிஞர் நிலையம்"
செய்தித்தாள், நூல், [illegible] விற்பனை
சு. வெ. தங்கசாமி,
5, மந்தவெளிசந்து, மயிலை

அன்புள்ள குமார்,

தெற்குக் கரையிலே, மண்டலத்தையே விழுங்கி விடுமோ, என்று எண்ணிடத்தக்க முறையிலே கொந்தளிக்கும் கடல் குமுறி எழுந்ததே—அந்த அலைகளின் ஆர்ப்பரிப்பு ஓய்வதற்குள்; தமிழகத்து 'மக்கள் கடல்' போர்ச் குரல் எழுப்பி இருக்கிறது!

எச்சரிக்கை எதுவும் இல்லாமல், கொந்தளித்து எழுந்த கடல் தோப்புத்துறைகளையும் — வேதாரண்யங்களையும் உருவாக்கி விட்டு அடங்கியது.

தமிழினத்தைப் பழித்தான் தார்ப்பை ஏந்தும் ஒருவன் என்று கேட்ட அளவில்—திசையெட்டும் புகழ் சேர்த்த செங்குட்டுவன்—தசையெல்லாம் துடிக்க—வடக்கு நோக்கி படைகளைத் திருப்பிவிட்டானே! அதைப் போல தமிழகத்தின் மானங்காக்க-மணமீட்க-தமிழகமே-ஆதிக்க பீடத்தை நோக்கி முகம் திருப்பப்போகிறது!

குமார், அந்தப் பிப்ரவரி 20 தமிழகத்தின் சரித்திரத்திலே ஒரு திருப்புக் கட்டம்!

★ போர்க்களம் அமையுது! ★

எச்சரிக்கைத் தாளை வேலியிலே சொருகி அரசு கட்டிலை நோக்கி வீசி எறிந்து விட்டு,நாள் குறித்து நாட்டோருக்கு அறிவித்துவிட்டு-தமிழகம் போர்க்கொடியைஉயர்த்திப் பிடித்திருக்கிறது.

இந்த கொந்தளிப்பு-வேதாரண்யங்களை உருவாக்காது!

வேண்டாதவர்களின் ஆதிக்கத்தைக் கருவருக்கும்!

உள்ளதைப் பாழாக்காது!

உரிமையைப் பாதுகாக்கும்!

★

உரிமையைப் பாதுகாக்க—கடலெனத் திரண்டிருக்கிறதே ஒரு மாபெரும் அணிவகுப்பு, அதைப் பார்க்கும்போதுதான் எத்தகைய மாபெரும் எதிர்ப்பை இந்த சர்க்கார் விலைகொடுத்து வாங்கி இருக்கிறது என்று தெரிந்து கொள்ள முடிகிறது!

நேரு சொன்னால் — அதற்கு 'அப்பீலே' கிடையாது-அதுதான் தேவவாக்கு! என்று கூறிடும் பக்தவத்சலங்களையும் நாம் சந்திக்காமலில்லை!

'நேரு என்ன குப்பைமேட்டுக் கீரையா-கொண்ட கொள்கையை விடமாட்டார்-அதோடு மட்டுமா-அவர் வாழ் நாளிலேயே முன் வைத்த காலை பின் வைத்தறியாதவர்' என்று இன்னும்கூட சொல்லிக் கொண்டு திரியும் காங்கிரஸ் காரர்கள நம் கண்களுக்குத் தெரிகிறார்கள்!

அப்படிக் கூறுபவர்கள்—நேருவின் வாழக்கையைப் பற்றியே சரியாகத் தெரிந்து கொள்ளாதவர்கள் என்றுதான் அர்த்தம்!

★

குமார், உலக சரித்திரத்திலேயே முன்வைத்த காலை பின் வைக்க மாட்டேன்—என்று திமிர் வாதம் பேசிய தலைக்கனம் பிடித்தவர்களைப் பற்றி நீ அறிந்திருப்பாய்!

இமயத்தின் முதுகிலே கால் வைத்து ஏறி வந்தான் அலெக்சாண்டர்—அவன முன் வைத்த காலை பின் வைக்காமல் இருந்திருந்தால் — இன்று நாமெல்லாம் கிரேக்க ஆட்சியிலல்லவா இருந்திருக்க வேண்டும்! அகில உலகத்தையே என் உள்ளங்கைக்குள் அடக்கிவைப்பேன் என ஆர்பரித்தான் இட்லர்-ரைன் நதியில் ரத்தவெள்ளம் புரண்டோடுவதை பார்த்து,சித்தம் பேதலித்து சாவை அணைத்துக் கொண்டான்!

முரட்டுவாதம் பேசிய முசோலினி அரசு கட்டிலிலே இருந்து உருட்டி விடப்பட்டான்!

நினைத்துகூட பார்த்திருக்க மாட்டானே-இன்றுகாட்டாற்று வெள்ளத்திலே--காகிதப்படகு போல, 'பாமோசாத்' தீவிலே தவித்துக் கொண்டிருக்கும் சியாங்கேஷேக்! சீசர்—செங்கிஸ்கான்—தைமூர் கோரி-கஜனி,இப்படி முன்வைத்த காலை பின் வைக்கமாட்டேன் என்று முழக்கமிட்டு—கடைசி நேரத்தில் மூலையிலே தள்ளப் பட்ட சரித்திரக் 'கதாநாயகர்' களைப்பற்றி நேரு பண்டிதருக்கு நாம் சொல்லத் தேவையில்லை! அவர் சரித்திரம் படித்தவர் மட்டுமல்ல-'உலக சரித்திரத்தை'யே எழுதியவர்!

பாஸ்டிலியைப் பற்றிம், அது ஏன் படுசூரணமாக்கப் பட்டது என்பதைப் பற்றியும் - காமராசருக்குத் தெரிந்திருக்க நியாயமில்லை—பாவம்!

அந்த ரத்தப் புரட்சிக்கு தன் 'உலக சரித்திரத்தில்' பல அத்தியாயங்களையே ஒதுக்கி இருக்கிறார் நேரு பண்டிதர்!

எனவே 'முன் வைத்த காலை பின் வைக்க மாட்டேன்' என்று சொன்ன சர்வாதிகாரிகளைப் பற்றி நேரு அறிந்தவர். ஆகவே தான் நாம் சரித ஏடுகளின் சில குறிப்பிட்ட பகுதிகளை அடிக்கடி சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

★

நேரு பண்டிதரின் அரசியல் வாழ்வையே கூட எடுத்துக் கொள், எத்தனை இடங்களில்—எத்தனை முறை அவர் முன் வைத்த காலை பின்னாலே நகர்த்தியிருக்கிறார்,

தேர்தலுக்காகவும், திருட்டு வியாபாரத்தில் அதிகாரிகளிடம் சிக்காமல் இருக்க வேண்டும் என்பதற்காகவும் கதர் சட்டை போட்ட காங்கிரஸ்காரர்களுக்குத் தெரியாது.

★

காங்கிரஸ் கட்சியிலிருந்தே விலகிக் கொள்வதாகத் துணிந்து ராஜினாமா எண்ணத்தோடு முன் வைத்த காலைப் பின் வைத்திருக்கிறாரே நேரு பண்டிதர்!

காஷ்மீர் பிரச்சனையிலே இவர் முன் வைத்தகால் என்னவாயிற்று ?

'ஆந்திரத்திற்கு தனிமாநிலமா? அந்த ஆசையை மறந்து விடுங்கள்!' என்று முழக்க மிட்டாரே—'முன் வைத்த காலைப் பின் வைக்காத' இந்த மாவீரர் நிலைமை என்னவாயிற்று!

ஒரு பொட்டி சீராமுலு தாய கத்து மண்ணுக்காகத் தலை சாய்த்தான்!

ஆந்திரமே அலைகடலாயிற்று!

ஓடிக்கொண்டிருந்த ரயில்களெல்லாம் உருண்டன!

அரசியல் பணிமனைகள் புரண்டன!

தந்திக்கம்பங்கள் வேரோடு பிடிங்கி சாய்க்கப் பட்டன!

விழிகளிலே அனல் தேக்கி ஓலமிடும் அலைகடலென ஆர்பரித்தனர்!

நேரு பண்டிதரின் செவிப்பறைகளை, ஆந்திரத்து மண்ணிலே இருந்து கிளம்பிய 'அபாய அறிவிப்பு' மோதிற்று.

இத்தனையும் மறந்து விட்டு 'நேருவே முடிவு செய்துவிட்டார் இனி அதை மாற்றமுடியாது' என்றும் 'முன்வைத்த காலைபின் வைக்காதவர்' நேரு என்றும் இன்றளவும் பேசிக் கொண்டிருக்கும் 'ஏதுமறியாத'வர்களைப் பற்றி என்ன எண்ணுவது குமார்!

உலக நாடுகளின் தகராறுகளை தீர்த்து வைக்க-கச்சை கட்டிப் புறப்படும் பண்டிதர்—

சீனத்துக்கு ஐ. நா. சபையிலே இடம் கொடுக்கவேண்டும் என்று ஓலமிடும் இந்த நியாயவான்—பிப்ரவரி 20 ஐ எப்படி சமாளிக்கப் போகிறார்!

அந்த நாள்!

நேரு பண்டிதரின் 'துலாக் கோல்' சில கள்ள வியாபாரிகளின் கையிலே இருக்கிறதே அந்த இழிந்த போக்கை உலகிற்கு எடுத்துக் காட்டும்!

உரிமையைப் பறிக்க வந்தோரின் இதயக் கதவுகளை சம்மட்டி கொண்டு தாக்கப் போகிறது அன்று எழப்போகும் இடிக்குரல்!

வெள்ளம்போல் கிளம்பி இருக்கும் தமிழர் படைக்கு—'யார்'மூட்டிய தீயிலோ குளிர் காய்ந்து கொண்டிருக்கும் காமராசரைப் பற்றியோ—ஒப்புக்கு அழுகிறார்கள் என்று நம்மைப் பார்த்துக் கூறும், உடம்பிலே 'உப்பில்'லாத சுப்பிரமண்யத்தைப் பற்றியோ கவலைப்பட நேரமில்லை!

'மானம்' ஒன்றாவது மிச்சமிருக்கும் இந்த மாநிலத்து அமைச்சர்களிடம், என்று எதிர்பார்த்து ஏமாந்த தமிழர்கள்-அனல் மூச்சு விட்டபடி கிளம்பப் போகிறார்கள்!

★

வில்லிலே பூட்டுவதற்குள் வீறு கொண்டு கிளம்பும் அம்பென மாணவர் பட்டாளம்; அதோ அணிவகுத்து நிற்கிறது!

அந்த முன்னோடும் படையினர் தம் நெஞ்சங்களிலே அண்ணா, மா. பொ. சி., பி. டி., ராசன், ஜீவானந்தம், அந்தோணி, இப்படி தமிழர் தலைவர்கள்!

குமார், எத்தகைய அருமையான சூழ்நிலையை உருவாக்கி விட்டார் நேரு பண்டிதர்!

பிப்ரவரி 20! தமிழகமே கை கோர்த்து—மெய் சேர்த்து தோளோடு தோளிணைத்து—சுடர் முகம் தூக்கப் போகிறது!

கடமை-கண்யம் - கட்டுப்பாடு! அறிஞர் அண்ணா அவர்கள் அடிக்கடி நமக்குக் கூறிவரும் இதே 'அறிவாயுதங்கள்' தான் அன்றும் நம் இதயகீதமாக இருக்கும்!

தூரத்திலே விலகி நிற்பவர்கள் கூட, திரண்டிருக்கும் நம் அணி வகுப்பை பார்த்து, ஏ! அப்பா! 'இப்படை தோற்கின் எப்படை ஜெயிக்கும்' என்று 'மனோன்மணியம்' பாடாமலா இருக்கப் போகிறார்கள்!

அன்புள்ள,
பொன்முடி

தலையங்கம்

காதலிலே கவிதையிலே களம் போதும் பேச்சு;
கணவனுக்கும் மனைவிக்கும் திராவிடமே மூச்சு!

சென்னை 10-2-56 வெள்ளி

அமிர்தசரஸ்-ஆவடி!

தேரைகளாய், தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ள முடியாதவர்களாய் தேம்பி அழவும் சக்தியற்றவர்களாய் இந்த மண்ணுக்கு உரியோர் மண்ணுகிக் கொண்டிருக்கும் இந்த வேளையிலேதான லட்சோப லட்ச ரூபாய்களை வாயில் போட்டுக் கொண்டு அமிர்தசரசிலே காங்கிரஸ் மாநாடுகூடப் போகிறது.

கையிலே கோல்கொண்டு, அரையிலே காந்தீயக் ஆடை கொண்டு கோபுரமேறி நிற்கும் நேருவென்னும் இடையர் தலைவன் கீழ் தேசியக் கூடாரத்து ஆடுகள் திரளப் போகின்றன.

முப்பதாயிரம் பேருக்கான போஜன சாலைகளாம்; யானை, குதிரை, ஒட்டகங்களின் அணிவகுப்புகளாம்—இத்தனை வைபவங்களுடன் ஏழைகள் இயக்கமென்று எக்காளம் ஊதும் காங்கிரஸ் கட்சியினர் பஞ்சாபிலே ஒரு 'ஆவடி' நடத்துகின்றனர்.

கட்சியென ஒரு அமைப்பிருந்தால் அதற்கு மாநாடு என்னும் பெயரிலே களத்துக்கான ஒத்திகை நடைபெற வேண்டியதுதான். ஆனால் நாதியற்று உடலில் பாதியை பஞ்சத்திடமும், பட்டினிக்கும் விற்றுவிட்டு எலும்புக் கூடுகளாய்த் திரியும் எண்ணற்றோரை மறந்து விட்டா? விழியிலே பெருகும் நீரைத் துடைக்காமல—முன்னேற்றப் பாதையிலே வழியும் காட்டாற்றைத் தடுக்காமலா?, இதைவிட்டு ஆழிதாண்டி அசலமெங்கும் புகழ் பெருகச் செய்வதிலே என்ன பயன் வந்துவிடப் போகிறது?

—இப்படி பொது மக்கள் கேட்க ஆரம்பித்துவிட்டனர், பஞ்சாபிலே துவங்கப்போகும் கோடீஸ்வரர்களின் கோலாகலத் திருவிழாவைப் பார்த்துவிட்டு!

தேபர் தங்கமானவர்; தேகத்தின் அணுவெல்லாம் காந்தீயக் கனல் பெற்றிருப்பவர்; ஏழைகள் நண்பன்; எளிமையின் பிம்பம்—அவருக்குத்தான் அமிர்தசரசிலே நடைபெறப் போகும் காங்கிரஸ் கும்பமேளாவில் காந்தியின் வடிவத்தை தங்கச் சிலையாக்கி, அதை சன்மானம் வழங்கப் போகின்றனர்!

குடிசையைக் கண்டு குமுறும் எரிமலையானவர்; வறுமையைப் பார்த்து வரிப்புலி போல் சீறியவர்—அந்தக் காந்தியைத்தான் தங்கமாக்கி, அவர் கொண்ட கொள்கையைக் காறி உமிழ்ந்திருக்கின்றனர்!

கொடுமை! கொடுமை! ராஜகட்டத்திலே அண்ணலைச் சமாதியாக்கிவிட்டு பத்தரைமாற்று பசும்பொன் உருவத்தைத் தானம் பெறுகிறார்கள், நீலிக்கண்ணீர் வடிக்கும் போலிகள்!

அதுமட்டுமா? ஜாலியன் வாலாபாக் சதுக்கத்திலே டயர் சகோதரர்கள் இரண்டாயிரம் உயிர்களைப் பலி கொண்டார்கள் அல்லவா? அந்த இடத்திலும் இவர்கள் நடுக் கல் ஒன்று நாட்டி, அதற்குச் சிவப்பு வர்ணம் பூசி, வெள்ளையரின் தோட்டா பதிந்த இடங்களையெல்லாம் கண்ணாடியால் மூடி கொலு வைத்திருக்கிறார்களாம்!

வேட்டைநாய் கடித்துவிட்டதாக ஓநாய் புலம்பியதாம், இரத்தம் வழியும் பற்களை மறைத்துக் கொண்டு, பக்கத்திலே திருகி எறியப்பட்ட ஆட்டுத் தலைகளை அப்புறப்படுத்திவிட்டு! பரதகண்டமெங்கும் தொகை தொகையாய்ப் பொதுமக்களை நிறுத்திவைத்து பகைவர்களைப்போல அவர்கள் தேகத்தைத் துப்பாக்கி ரவைகளால் துளைத்தவர்கள் இப்போது டயரைப் பழிக்க வந்திருக்கிறார்கள்!

பிணக்குவியலுக் கிடையிலே புகுந்து கரு விழிகளைக் கற்கண்டே கட்டியென மென்றுத் சாப்பிட்டவர்கள், இன்று வெண்புறு வேஷம் போடுகிறார்கள்! இரத்தச் சகதியிலே அமிழ்ந்து விட்ட அசோகச் சக்கரத்தை எடுத்து நிமிர்த்தி, புலால் நாற்றத்தை மறைக்க புனுகு தடவுகிறார்கள!

அமிர்தசரஸ் ஆவடி இவ்வளவுடன் முடியப் போகிறதா? இல்லை, இல்லை. கல்லைப் போல் அசைக்க முடியாத அளவுக்கு காங்கிரஸ் வட்டாரத்திலே வலுப் பெற்றிருக்கும் நேரு பண்டிதரின் தலையிலே கதர்க் குல்லாய்க்குப் பதில் தங்கக் கிரீடத்தையும் தூக்கிவைக்கப் போகிறாகள். அதற்கான யோசனைகளையும் அவரது சீடகோடிகள் தயாரித்து வருகின்றனர்.

'தேசத்தைக் குழப்பம், குலைவிலிருந்து காப்பாற்ற நேருவை மக்கள் சர்வாதிகாரி' என்று பிரகடனப் படுத்துமாறு, முன்பு அகில இந்திய பார்வாடு பிளாக்போதுக் காரியதரிசியாக இருந்த ஷிப்பத்ரயாஜீ அறிக்கை வெளியிட்டிருக்கிறார்.

இந்தியக் குடியரசுக்கு ஒரு குட்டி இட்லரை தயாரித்துக் கொடுக்கப் போகிறது அமிர்தசரஸ் மாநாடு!

வீரநெப்போலியன் பிரான்சு நாட்டிலே செய்து முடிக்கக் கருதிய காரியத்தை, ஜூலியஸ்சீசர் கனவிலே மட்டும் கண்டு, கண்டு களிப்பு கொண்டிருந்த மணிமகுடம் பூணுந்திட்டத்தை, நேருவைப் போறுந்த வரையிலே அதைப் பூர்ண கும்பத்துடன் நிறைவேற்றக் கோப்பதற்கு அவரது பாதம் வருடிகள் காத்திருக்கின்றனர்.

சர்வாதிகாரியாகப் போகும் மோதிலால் மைந்தருக்கு இந்த நேரத்தில் அவருடைய வாசகங்களையேதான் நாம் நினைவுபடுத்த வேண்டியவர்களாயிருக்கிறோம்,

"(ஆக்டேவியஸ் சீசருக்குப் பிறகு) சீசர் என்னும் சொல்லே சக்கரவர்த்தி என்னும் பொருளில் வழங்க ஆரம்பித்தது. 'கெய்சர்' 'ஜார்' என்னும் சொற்கள் 'சீசர்' என்ற சொல்லிலிருந்து பிறந்தவைகளேயாகும், கெய்சர் என்னும் சொல் இந்துஸ்தானி மொழியிலும் நெடுங்காலமாக வழங்கி வருகிறது. கெய்சர்—இ-ரோம் (ரோம் சக்கரவர்த்தி) என்று இந்துஸ்தானியில் சொல்லுகிறோம். இங்கிலாந்தின் அரசராகிய ஜார்ஜ் மன்னர் இன்று 'கெய்சர்-இ-ஹிந்த்' என்னும் பட்டத்தை மகிழ்ச்சியுடன் பூண்டு விளங்குகிறார், இன்று ஜெர்மன் தேசத்துக் கெய்சர் போய்விட்டார், ஆஸ்திரியா தேசத்துக் கெய்சரும் அவ்வாறே ஆனார்கள், ருஷ்யா தேசத்து ஜாரையும் காணோம்"

—இப்படி முடி புனைந்தவர்கள் வரலாறு முகாரியில் முடிவுறுதை நேருவின் பேனாவே விளக்கமுறத் தீட்டியிருக்கிறது.

ஆசியஜோதியின் அந்தரங்க வட்டத்தில் உலவுபவர்கள் அவருக்கு 'மக்கள் சர்வாதிகாரி' பட்டத்தை நாளை அமிர்தசரஸ் மாநாட்டிலே வழங்கி-நேருவே அதை விரும்பி – மனமுவகமாக ஏற்றுக் கொள்ளத் தக்க சூழ்நிலை உண்மையிலேயே உருவாகுமானால், அவர் உலகச் சரித்திரத்தில் குறிப்பிட்டபடி இருந்தவிடம் தெரியாமல் சுக்கு நூறாகப் போயிருக்கும் கெய்சர், ஜார் வரிசையிலே இந்த 'மக்கள் சர்வாதிகாரி' பட்டமும் சேர்ந்துவிட அதிகநாள் பிடிக்காது என்பதை நாம் மட்டும் எப்படிச் சுட்டிக் காட்டாமலிருக்க முடியும்?

*

பிப்ரவரி-20

எப்பக்கமிருந்து உரிமை பறிக்கப் பட்டாலும்
தமிழனே; எதிர்த்திடத் தயங்காதே!

பொதுவேலை நிறுத்தம் செய்!
புன்மை இருள் போக்கிடப் புறப்படு!

'ஓநாய்கள்'—ஜாக்கிரதை!

44 ஓநாயைக் கொன்ற ஒரு வேட்டைக்காரனுக்கு 2000 பவுன் சன்மானம் வழங்கப்பட்டதாம்; இங்கல்ல — இரஷ்யாவில்!

இதிலென்ன புதுமை புகுந்து கொண்டிருக்கிறது. வீரனுக்கு விருது வழங்கி இருக்கிறார்கள். விவேகமுள்ள சர்க்கார், என்று ஆரம்பித்துவிடப்போகிறீர்கள்.

ஒன்றல்ல; 44 ஓநாய்களைக் கொன்று குவித்தவன். நாட்டோரின் புகழ் மாலைக்கு தகுதியுடையவன் என்பதை நாமும் மறுக்கவில்லை; யாரும் மறுக்கவும் முடியாது.

வால்கா நதி தீரத்திலே ரத்த நாக்குகளை தொங்கவிட்டபடி, மனித வாடை எந்தப் பக்கத்திலே வருகிறது என்று மோப்பம் பிடித்துத் திரியும் ஓநாய்கள், எத்தகைய கொடிய ஜந்துக்கள் என்பதை அந்தப் பகுதியிலே வாழ்கின்ற குடியானவர்களைக் கேட்டால் கதை கதையாகச் சொல்லுவார்கள். அத்தகைய கதைகளைப் படிக்கும்போது; நெஞ்சு திடுக்கிடும். உடலெல்லாம் நடுக்கம் பிறக்கும். மயிர்க்கூச்செரியும்;

இரவு நேரங்களிலே அத்தகைய ரஷ்யக் கதைகளைப் படிக்கும்போது தூக்கத்திலேகூட ஒரு ஓநாய், கோரமாகவாயைப் பிளந்து கொண்டு நிற்பதைப் போல காட்சிதரும்; அவ்வளவு கொடிய மிருகம் ஓநாய்!

கூட்டமாகவரும்—குரல் வளையைக் கவ்வும்; ரத்தத்தை குடிக்கும்; சாரற்ற சக்கைகளைப் போல பிரேதங்களைக் கிழித்து எறிந்து விட்டு, ஊளையிட்டபடியே ஓடிவிடும்!

செயல் கொடூரமானதுதான்—நினைத்தாலே குலைநடுக்கம் ஏற்படுத்துவதுதான்; ஆனால் மிருகங்கள்!

பச்சை ரத்தம்தான் அவைகளின் உயிர் காக்கும் ஜீவன்! இது இயற்கையமைப்பு. பச்சை மாமிசமும் பெருக்கெடுக்கும் புது ரத்தத்தையும் குடித்துதான உயிர் வாழவேண்டுமென்ற நிலை அவைகளுக்கு, அதிலும் ஓநாய்க்கூட்டம்! இதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை.

★

இதே நேரத்தில் வால்கா நதிக்கரையிலே வாழ்கின்ற ஓநாய்களுக்கு—நாங்களென்ன மட்டமா? என்று கேட்பது போல கங்கைக்கரைப்பக்கம் வாழ்கின்ற ஒரு 'ஓநாய்க் கூட்டம்' குரல் எழுப்பி இருக்கிறது!

'ஓநாய் - குரலெழுப்புவதாவது—என்று எண்ணிவிடாதீர்கள்!

இந்த ஓநாய்கள் புதுவிதமானவை! பேசும் ஓநாய்கள்! மனித உருவிலே புகுந்து கொண்டிருக்கும் பயங்கர மிருகங்கள்!

★

பச்சைக் குழந்தைகளைக் கண்டால் சில மிருகங்கள்கூட, கொல்லாமல் விட்டு விடுமாம்!

ஆனால் இவைகளுக்கோ, பச்சைக் குழந்தைகளின் ரத்தம்தான் தேனைப் போல இனிக்கிறதாம்.

சாதுக்களின் கோலத்திலே திரிந்து கொண்டிருக்கும்—இந்த 'நரமாமிசப் பட்சிணிகள்' தவவேடம் பூண்டிருக்கிறார்களாம்!

உடலழகி ஊர்வசியோ-உதட்டழகி மேனகையோகூட நெருங்க முடியாதாம்-அவ்வளவு பயங்கரத் தோற்றமுடையவர்களாம் இந்த ஆத்மாக்கள்!

புலித்தோல்—பொற்பாதக் குறடு; இந்த பாதகர்களின் பூஜைக்கோ, பச்சை சிசுக்களின் புதிய ரத்தம் தேவைப்படுகிறதாம்!

ஆண்டவன் பெயரால் சிறுவர்களின் மாமிசத்தையே விருந்தாக்கிக் கொண்டு மகிழ்கிறார்களாம், இந்தக் கொடியவர்கள்.'

குளிர்வடிக்கும் மான் குட்டிகள், பிறைவானப் பட்டாளங்கள்!

அவர்களைத்தான்—புறுக்களைப் பிடித்து வருவதைப்போல நகரங்களிலே இருந்து கடத்தி வந்து தின்று ஏப்பம் விடுகிறார்களாம்.

அந்த 'ஓநாய்க் கூட்டத்தைச் சேர்ந்த சிலரை அண்மையில் போலீசார் கைது செய்து அந்த 'சாது' வைப்பார்த்து:

'ஏனப்பா சிறுவர்களைப் பிடித்துத்தின்கிறீர்கள்'' என்று கேட்டதற்கு, 'இன்று—நேற்று நடைபெறுகிறது, விக்கிரமாதித்தன் காலத்திலிருந்து எங்கள் முன்னோர்கள் இதைத்தான் செய்து வருகிறார்கள். இதிலென்ன ஆச்சர்யம்!' என்று பதில் சொன்னானாம் அந்த காட்டுமிராண்டி!

இந்தக்கொடுமையை அந்த மனித'ஓநாய்கள்' மதத்தின் பெயரால்தான் செய்து கொண்டிருக்கிறார்களாம்! இதை அதிகம் கண்டித்தால் 'சிறுதொண்டரையும்' 'சிவபெருமானையும்' சாட்சிக்கு இழுத்து விடுவார்களோ அந்த 'மாபாவிகள் என்ற பயம் இங்குள்ள பக்தர்களுக்கு! பாவம்! சங்கடமான நிலைதான்!

★

மதத்தின் பெயரால் நடைபெறும் ஒழுங்கீனங்களைப் பார்க்கும்போது 'அய்யோ மதமே நீ அழிவது எந்நாளோ' என்று கூறி முடிப்பதற்குள்; 'மதம் அழிந்து வருகிறதே என்று அழுகுரல் எழுப்பி இருக்கிறார் பம்பாய் காங்கிரஸ் தலைவர் எஸ். கே. பட்டீல்.

மதச்சார்பற்ற சர்க்கார் என்பதால் மத விரோதமான சமுதாயத்தை வளர விடுவதை அவரால் அனுமதிக்க முடியாதாம்! நாடாளும் நாயகர்கள் மதத்தின் பேரால் நடைபெறும் 'கும்பமேளாவிற்கு' தலைமை வகித்துக் கொண்டிருக்கும்போதே, தோழர் பட்டீல் பதறுகிறார்—மதம் செத்துக் கொண்டிருக்கிறதாம்!

இந்திய சர்க்கார் மதச் சார்பற்றது என்பதை எதைக் கொண்டு நிர்ணயிப்பதோ நமக்குத் தெரியவில்லை.

தெருவிற்கு தெரு, மடாலயங்கள் உருவாக வேண்டுமாம்; மூலைக்கு மூலை பஜனைக்கூடங்களில் வேத பாராயணங்களின் முழக்கம் கேட்க வேண்டுமாம்;

எல்லா பள்ளிக்கூடங்களிலும்; கல்லூரிகளிலும், மாணவர்களுக்கு மதத்தை போதிக்க வேண்டுமாம்! இப்படி வார்த்தைகளை உதிர்த்திருக்கிறார்—அவ்வளவு ஆசை! மதத்தைக் காப்பாற்ற!

மதத்தின் பேரால் மனிதர்களைத் தின்று வாழும் கொடியவர்களைப் பற்றி வாய்திறக்க இந்த 'புனிதர்களுக்கு' துணிவு பிறப்பதில்லை; மாறாக, மதத்தைக் காப்பதற்கு கச்சை கட்டிக் கொண்டு புறப்பட்டு விடுகின்றனர்.

★

நாளுக்கு நாள் அறிவுத் துறையிலே வளர்ச்சி அடைந்து கொண்டிருக்கும் மேலை நாடுகளை வேறு சான்றுக்கு இழுத்திருக்கிறார். அங்கெல்லாம் 'சர்ச்சிக்குப்' போவோரின் தொகை அதிகரித்திருக்கிறதாம்!

இருக்கின்ற நான்கு முழத் துண்டையும் களைந்து விட்டு, மரக்கட்டை போல அழுக்குச் சேற்றிலே தலை முழுக்குப் போடப் போகிறானே இங்கிருக்கும் பஞ்சத்தாலடிபட்ட பக்தன்—அதைப் போலவா மேலை நாடுகளிலே ஏசுவின் விசுவாசிகள் நடந்து கொள்கிறார்கள்!

இங்கிருப்பவன்; குடந்தைக்கு செல்வதும், அங்கிருப்பவன், அன்னை மேரியிடம் அருள் கேட்கப் போவதும்—மதத்தை அடிப்படையாகக் கொண்டதாய் இருந்தாலும்;

இங்கிருப்பவன் பக்தியிலே எத்தகைய இழிபண்பு நிறைந்திருக்கிறது!

★ தொடர்ச்சி 10-ம் பக்கம்

நிலை

பெரு மழை பெய்துகொண்டிருந்தது மாலை மணி ஐந்தானாலும், காலை ஆறு மணி போல கரு மேகங்கள் நிறைந்திருந்தன. மாலதி என் அருமைத் தோழி. நான் இக் கல்லூரியில் கால் எடுத்து வைத்த ஆண்டு உளநூல் படிப்பு முடித்து எம். ஏ., பட்டம் பெற்று அவள் வெளியேறியவள். இப்போது அவள் சென்னையிலேயே ஒரு பெண்கள் கல்லூரியில் ஆசிரியராகப் பணியாற்றி வருகிறாள். ஓய்வு நேரங்களில் உணர்ச்சியும் உற்சாகமும் பெற பூங்காவிற்குப் போவதுபோல, ஓய்வாக இருந்த என் உள்ளம் அப்போது மாலதியின் மனத்தைப் பற்றி ஆராய்ந்து கொண்டிருந்தது. ஓயாது அலையும் ஒலியும் எழுப்புகிறதே கடல்; அதைப் போல மாளாத எண்ணங்களை மனம் மாறுது சிந்திக்கிறது.

மாலதி என் மனங் கவர்ந்ததற்கு காரணம், அவள் என் ஊர்க்காரி என்பதோடு. அழகான உருவம் அமைந்திருந்ததோடு அவளுக்கு சுவையாகவும்—சுந்தரமாகவும் பேசும் சொல்லாற்றலும் நிறைந்திருந்தது மாதவன் அவளோடு படித்த மாணவன். மாலதியின் மன—ஆளன் ஆமாம்! மணவாளனாக ஆக்கிக்கொண்ட பெருமை இன்று கமலாவைச் சேருகிறது. மாலதி—மாதவன் இன்று கமலா-மாதவனாகக் காட்சி அளிக்கிறான். இதனால் மாலதி மனம் என்ன பாடு பட்டிருக்கும். கல்லூரி முழுவதும் மாலதி-மாதவன் காவியம் அல்லவா பேசப்பட்டது! மாளாத சோகத்தால் மலைகளே சரிந்து விழும்போது மணல் குன்று மனம் படைத்த மாலதி என்ன ஆகியிருப்பாள். மாதவனின் முன்னாள் காதல் சொற்களே கற்களாக மாறி, அவள் மனக் கண்ணாடியை உடைத்திருக்குமே. ஒடியாத துடியிடை இடியாகும் இந் நிகழ்ச்சியை என்றாவது எண்ணித்தான் இருப்பாளா! இன்ப நினைவைத் தான் இனி மறப்பாளா? சரிந்த கூந்தலோடு, கவிழ்ந்த முகத்தோடு சோக மேகங்கள் சூழ்ந்து சோதி நிலவு மங்குவதுபோல கலைந்த ஓவியமாக என் கண்ணெதிரே அவள் நிற்பதுபோலத் தோன்றிற்று!

★

இன்று காலை ஏழு மணியிருக்கும். பெரு மழையும், பேய்க்காற்றும் பல உயிரைக் கொன்றதும், பயிரைப் பாழ்படுத்தியதும் செய்திகளாகவும், படங்களாகவும் நாளேடுகளில் சித்தரிக்கப் பட்டிருந்தன. விழிக்கு விருந்து செய்யும் தாமரை பூத்த தடாகங்கள், அலை அசையக் கரைபுரள ஓடும் அழகு ஆறுகள், பெருகி வரும் அருவிகள், இவைகள் எல்லாம் நீர் நிலைகள்தான். நிலை மாறிப் பெய்த மழையால் நீர் நிலைகள் அழிவு செய்துவிட்டன; ஏழை வாழ்வில் இருளை ஏற்படுத்தி விட்டன. காற்றும் அலையும் நிலை மாறினால் கலம் கவிழத்தானே செய்யும். மாலதியும் இப்படித்தானே! சுற்றிச் சுற்றி எங்குச் சென்றாலும் மனம் மாலதியைப் பற்றியே சூழ்கிறது. இடியால் கருகிச் சருகான செடி கொடிகள்...காதல் முடிவால் கருகிக் காயும் மாலதி... இருக்காது என் உள்ளம் அமைதி அடையவில்லை. அவளுக்குக் கடிதம் எழுதவேண்டும். அவள் மன மாளிகை மறைந்த மாயம் என்னவோ!

★

சென்னை

அன்புள்ள சரசாவுக்கு,

என் நிலையைப் பற்றி வருந்தியதோடு தவித்தும் உளம் பதைத்தும் கடிதம் எழுதியிருக்கிறாய். மாலதி மாதவனை மணந்து கொள்ள நினைத்தும், நேற்றும் உண்மை. இன்றும் உண்மை; இனியும் உண்மைதான். புழுக்கள் பட்டுப் பூச்சியாகும் என்று படித்திருப்பாயே அதைப் போல நான் பட்டுப்பூச்சியானேன், நிலை வேறுபாட்டாலும் பிறவற்றாலும் அவர் வெட்டுக்கிளியானார். புரியாவிட்டால் தவளையும் பருந்தும் தனி வாழ்வு நடத்தத் தொடங்கி தவளை தடாகத்திற்குத் தாவ, பருந்தோ விரிந்து கிடக்கும் விண்ணில் பறக்க ஒத்து வாழ முடியாதிருந்தது என்று படித்திருப்பாய் அந்தக் கதைதான் என் காதல் இலக்கியத்தின் விதை. மாதவன் தனது குள்ளச் சமூகக் குட்டை நோக்கி ஓடும் தவளை.

பிறபின், அன்புள்ள,
மாலதி.

உள்ளபடியே இந்தக் கடிதம் எனக்குப் புரியவில்லை. உளநூல் படித்தவள் அல்லவா! சிக்கலையும் குழப்பத்தையுமே சேர்த்து எழுதியிருக்கிறாள் என்று எண்ணிக் கொண்டேன். அன்று நான் உலாவச் சென்றேன், தனியாக அல்ல, மான்கள் கூட்டமாகத் தானே செல்லுமாம்! தோட்டத்திலே அமர்ந்திருந்த எங்களை நோக்கி ஓர் அழகான இளைஞர் வந்தார். அவர் தான் லலிதாவின் அண்ணனும். பெயர் மாதவனும். இந்த மலர்ந்த மு மாதவனு மாலதிக்குத் தத்தும் தவளையாகத் தோன்றுகிறார் என்று ஆச்சரியப் பட்டேன்.

துரை. நடராசன்

★

அன்று மாதவன் கல்லூரி விடுதிக்கு வந்திருந்தார் லலிதாவும் அவர் தோழியரும் பொருட்காட்சிக்குப் போயிருந்தார்கள். உட்கார்ந்திருந்த மாதவனோடு பேசத் தொடங்கினேன். "பொருட்காட்சி என்று பெயர் வைக்கிறீர்களே தவிர, போகின்றவர்கள் வருபவர்களைப் பார்ப்பதும், வருபவர்கள் போகிறவர்களைப் பார்ப்பதும் சேர்ந்து அது கண்காட்சியாகிறது.

ஏற்கனவே, லலிதாவுக்கு வெளியே புறப்படுவதில் விருப்பம் அதிகம் என்றார் மாதவன். உடனே, "இல்லை மாதவன் பொதுப் படையாகவே பொருட்காட்சியைக் குறை கூறுகிறீர்கள். என் தோழி மாலதி மூன்றாண்டுக்கு முன்பு பொருட்காட்சியில் தான் ஒரு காதல் புதையல் கண்டெடுத்தாள் என்றேன்." மாதவன் முகத்தில் விநோத ஒளி வீசியது. 'அப்படியா" என்ற ஏக்க ஒலி பிறந்தது. "உங்களுக்கு மாலதியைத் தெரியுமா?" என்றேன. தெரியாது மாலதி-மாதவன் என்று சமஸ்கிருத காவியம் ஒன்றுண்டு என்று சொல்லி விட்டு மழுப்பினார். மனத்தை மறைக்கலாம். ஆனால் இந்தக் கண்களை ஒளிக்க முடியாது. கண்கள்தான் மன மாளிகையின் இரு கதவுகளாயிற்றே! லலிதாவோடு என் தொடர்பு இப்போது மிகுதிப்பட்டது. லலிதாவின் அறையில் ஒரு நாள் "மாதவன் குறிப்புகள்" என்ற நோட்டுப் புத்தகத்தைக் கண்டதும் ஆர்வத்தோடு புரட்டிப்பார்த்தேன். அப்புறம் என்ன! அறைக்கு எடுத்து வந்து படிக்கத் தொடங்கினேன்.

★

"மாலதி ... சுவையான அந்தப் பெயரைச் சொல்வதிலே ஓர் இனிமை. இன்பத்திற்கு "நன்னூல்" இனிமைக்கு "தொல்காப்பியம்." சுவைக்கோ "கலித்தொகை" பேச்சுக்கோ "புறநானூறு" பெருகும் அன்புக்கோ "ஐங்குறுநூறு" மாலதி- மாதவன் என்று வடமொழிக் காவியம் ஒன்று உண்டாம். இனிப் புதிய செந்தமிழ்க் காவியம் ஒன்றும் உண்டு.

இப்படித் தொடக்கம் இன்பமாக இருந்து. இரவு 8 மணி ஆனதால் எழுந்து போய் உணவு முடித்து திரும்பி சில ஏடுகளைப் புரட்டினேன்.

"உண்மையாகவே அவள் கேட்கும் கேள்விகளுக்குப் பதில் சொல்ல என்னால் முடியவில்லை. உண்மையைக் கேட்கிறாள். உண்மையைக் கூறவோ எனக்கு அச்சம் அன்றும் அப்படித்தான் கேட்டாள்" நான் நொண்டியை கண்டு கூட பரிதாபப்படவில்லை. உரமான இருகாலிருந்தும் ஸ்திரமான நெஞ்சிழந்து சீர்திருத்தத்தை நோக்கி ஓடமுடியாமல் நொண்டுகிற பெரியவர்களை எனக்குக் கொஞ்சமும் பிடிப்பதில்லை, நீங்கள் என்ன ஊமையா செவிடா என்றாள்? என்னபதில் சொல்வது. ஊமையாக மட்டும் இருந்து விடாதீர்கள், உலகம் நம்மை ஒழித்து விடும் என்று அன்றே எச்சரித்தாள்.

வார்டன் வரும் நேரமாயிற்று. எழுந்து வேறு புத்தகம் படிப்பது போல பாசாங்கு செய்தேன், என் எண்ணமும் இருவிழிகளும் அந்த ஏடுகளிலேதான் பதிந்திருந்தன.

இனிய இசை மழை பொழியும் யாழின் நரம்பு ஒன்ற அறபட்டால் ஐயோ! இடையில் ஒரு ஏடு இல்லை, வருத்தத்தோடு மிகுந்ததைப் புரட்டலானேன். 'கமலாவுக்கும் எனக்கும் திருமணமாயிற்று. நான் நினைத்து எதிர்த்திருந்தால் திருமணம் நடந்திருக்காது. ஆனால் துணிவில்லையே! அம்மாவின் ஆசை அது என்றார். மாலதியின் அம்மாவைப் பற்றியும் ஊரார் ஒருவிதமாகப் பேசுகிறார்களாம்.

ஒளி உலகத்திற்கு 'வா' என்று இருகை நீட்டி மாலதி அழைத்த போது செல்ல துணிவின்றி இருட்டறையிலேயே தங்கிவிட்டேன். "எதிர்ப்புக்கள் எந்த உருவில் வந்தாலும் எதிர்க்க வேண்டும். எழில் மிக்க வனிதை உருவிலே வந்து "இன்பம்" என்றழைத்தாலும் அன்பைக் குழைத்தாலும் ஒழிக்க வேண்டும். அழிக்க வேண்டும் என்றாள் மாலதி என் மனத்திற்கு அமைதியேயில்லை. காதலுக்குத் தடையே கூடாது. நிலை வேறுபாடு நீங்க வேண்டும். துணிவு வேண்டும். இல்லை என்றால் காதல் மாளிகை தான்! தான்! அவள் கடைசியாக எழுதிய கடிதம்—இல்லை உலகு அறிய வேண்டிய உயர்ந்த கவிதை.

அத்துடன் முடிந்திருந்தது. ஆர்வம் எனக்கு அதிகமாயிற்று. அந்தக் கடிதத்தைக் கண்டெடுத்தேன். கவிஞர் சொன்னது போல எழுத்தினை விழிகள் தாவ இதயத்தால் வாசிக்கலானேன்!

அன்புடைய மாதவனுக்கு நலமுண்டாகுக. ஆரம்பம் ஆச்சரியமாக இருக்கலாம் வியப்பாலேயே உலகை நடத்தும் விளையாட்டுக் குழந்தைதானே தாங்களும், குமரனாக நீங்கள் நின்றாலும் உள்ளத்தில் கோழைதான்; குழந்தைதான்! காதல் என்பது பூமாலை அல்ல போட்டு மகிழ, புரட்சித்தீ! அதனால் புன்னகை பூத்த முகத்தோடு பலர் புதை குழி நோக்கி நடந்தார்கள் அன்று கேட்டது போல இன்று ஊமையானீர்கள். என்னையோ ஒழித்துவிட்டீர்கள். உணர்வாலும் உள்ளத்தாலும் மட்டுமல்ல அறிவாலும் துணிவாலும் கட்ட வேண்டிய அழகோவியமே காதல்! வாழ்வில்கூட அப்படித் தான் பல வான்வீச்சிற்குப் பிறகு தான் வெற்றி முரசு: இன்ப அரசு. குடும்பம் ஓர் இன்பக் கடல். நெஞ்சில் துணிவுபெற்று நீந்தக் கற்றுக் கொள்ளுங்கள். எதிர்ப்புகள்—எளனங்கள்—இவைகளை ஏற்றுக் கொள்ளுங்கள். இனி ஓடமுடியாது. ஏனென்றால் கமலா உங்கள் கால் விலங்கு. மாலதி அப்படி அல்ல. உங்களோடு விரிந்து பரந்த விண்ணில் பறக்க நினைத்தேன். வீழ்ந்து விட்டேன். சிறகொடிந்தாலும் என் சிந்தை விண்ணின் மீதுதான் பறக்கும். மாலதி வாழ்வில் ஒரு முறைதான் காதலிப்பாள்-காதலித்தாள். தோல்வி பெற்றாள். மாலதியின் அகநானூறு முடிந்து விட்டது. அவள் புதுவாழ்வு தொடங்குகிறாள். புறநானூறு புரட்டுகிறாள்.

நான் அழிந்தது உங்கள் துணிவின்மையால்—அச்சத்தால், அந்த நிலைதான்-அந்த வேறுபாட்டு வலைதான் நம்மை—இல்லை என்னைக் கொலை செய்து விட்டது.

என்ன எழுத இருக்கின்றது.

மாலதி.

கடிதத்தைப் படித்ததும் என்னையறியாமல் கண்ணீர்த் துளிகள் விழுந்தன. சரசா மட்டு[illegible] ஊரும் உலகமும் [illegible] கொள்ள வேண்டிய கதை[illegible] என்று என் வாய் [illegible]

★

கண்ணை விற்றுச் சித்திரம் வாங்காதீர்!

★ 1-ம் பக்கத் தொடர்ச்சி

காக அம்புகளை எய்து கொண்டே இருக்கலாம்—சாதாரண மரமா-அது? "பச்சைத் தமிழர்" என்று பட்டம் பெற்ற மரம். கச்சை கட்டி விட்டேன் காங்கிரசை ஒழிக்க என்று புறப்பட்ட பெரியாரையே தன் இசைக்கு உரியவராக ஆக்கிவிட்ட மரம். அந்த எடுக்கும் தேசீயத் திருவாளர்களா? தெவிட்டாத இன்பமடா இந்த மந்திரிப் பதவியென நாக்கு சுழற்றி—நப்பாசை கொண்டலையும் அமைச்சர்களா? இல்லை—இல்லை-திராவிடர் கழக வட்டாரத்திலேயிருந்து புறப்படும் புகைச்சல்தான்மேலே குறிப்பிட்ட வாசகங்கள்!

தோழர்களுக்கு அறிவிக்க வேண்டிய நிலையிலிருக்கிறோம், இன்றுள்ள மூன்று நான்கு முக்கிய பிரச்சனைகளில் எல்லாக் கட்சித் தமிழர்களும் ஒன்றுபட வேண்டுமென்று 'விடுதலை' விரும்பியது. அந்த விருப்பத்தின் படியே சகல கட்சிகளும் கூட்டு சேர்ந்தன. பல கட்சிகள், ஒரு சில பொதுப் பிரச்சனைகளில் சகல கட்சிகளும் ஒன்று பட்டன.

தட்சிணப் பிரதேசம் வேண்டாம் என்று கண்டனக் குரல் எழுப்பப்பட்டிருக்கிறது. தமிழகப் பகுதிகளை உடனடியாகத் தாயகத்தோடு சேர்க்க வேண்டுமென்று வலியுறுத்தப் பட்டிருக்கிறது.

ஆச்சாரியார், பெரியார், அண்ணா, ம. பொ. சி. முதலியோர் அடங்கிய கூட்டத்திலே முடிவு செய்யப் பட்டிருக்கிறது.

தமிழகத்து அரசியல் வரலாற்றிலே ஆச்சரியகரமான திருப்பம் எல்லாக் கட்சிகளும் அணி வகுத்து நிற்கும் உருக்கமான காட்சி. இந்த ஒற்றுமையை பலர் பலி வாங்கப்பட்ட இடம். விட்டகுறை, தொட்டகுறை-பாச உணர்ச்சியின் காரணமாக, அன்பால் எச்சரிக்க விரும்புகிறோம்; ஆகாது இந்த அடாத செயல் என்று!

புலி வேட்டைக்குப் புறப்பட்டிருக்கிறோம், இடையிலே அனைவருமே இனவழி ஒன்றுபட வேண்டுமென்ற மூலக் கொள்கைக்கு முரணாக—ஆந்திர, மலையாள சோதரர்களின்பால், தமிழர் மோதிடும் நிலையை அனுமதிக்க மாட்டோம். பிப்ரவரி இருபதாம் நாள் நடைபெறும் பொது வேலை அடையாளப் போராட்டத்தை—அமைதியான கிளர்ச்சியை—பிப்ரவரி 20-ல் நாடு காண இருக்கிறது - நாட்டு அமைச்சர் காண இருக்கிறார்—

அதன்பிறகும் வழி பிறக்கா விட்டால், காமராசர் கண்ணிருந்

பாய்ந்தெழுவீர்! பட்டாளத் தோழர்களே!

மரம் தரும் பாதுகாப்பிலே நின்று கொண்டு தன்மான வாலிகளின் தலையறுக்கும் காரியத்தைவெற்றிகரமாக நடத்தி வருகிறார்கள்'

மந்திரி வேடமிட்ட மதியூகிகள்! தேவிகுளத்தையும், பீர்மேட்டையும் பெற்றே தீருவேன் என்று திசையெட்டு மதிர முழக்கினார் விருதுநகரார்! இன்று அந்த முழக்கம் முடங்கி விட்டது. மாறாக, தமிழ்ப்பகுதிகளின் விடுதலைக்காக கொடி உயர்த்தியிருக்கும் கூட்டணியை அழிப்பது எவ்விதத்தில் என்ற சிந்தனையில் ஈடுபட்டிருக்கிறார் இப்போது! திரைப் படங்களிலே வரும் நடிகர்கள் பலருக்குக் குரல் கொடுக்கும் பின்னணிப் பாடகர்களை அதிகமாக நேரில் கண்டிருக்க முடியாது, அந்தப் பின்னணியிலே ஒருஇசைவாணராகக்காமராசர் இருக்கிறார் வெளியில் விஷங்கக்கும் வசைவாளர்களாக சுப்ரமணிய—பக்தவத்சலங்கள் வெள்ளித் திரையில் காட்சி தருகிறார்கள். இந்த சூட்சமத்தை நாடு நன்றாக உணர்ந்திருக்கிறது. "ஏன் கருடா சுகமா?" என்று கேட்கும் துணிவை சுப்பிரமணியம் காமராசரிடமிருந்து பெறுகிறார்.

அந்தக் காமராசருக்குத் துதி பாடி, லட்சியங்களை யெல்லாம் விட்டுக் கொடுக்கவும் தயாராகி-விடுதலைப் படை வீரர்கள் மீது வேதனைக் கணைகளை வீசும் குத்தூசியார், தனக்குத் தேவையான தைரியத்தைப் பெரியாரிடமிருந்து பெறுகிறார். பாம்பு, பரமசிவனிடமிருந்து துணிச்சலைப் பெற்று, அதைக் கருடனிடம் காட்டிக் களிப்படைந்தது போல!

தேவி குளம் பீர்மேடு பிரச்சனை இப்போது அவசியமில்லை!

இந்தக் கிளர்ச்சி, வருகிற தேர்தலுக்காக நடத்தப்படும் நாடகம்.

தேவிகுளம், பீர்மேடு, தமிழர்களின் அப்பன் வீட்டு சொத்தா?

இப்படிக் கடுஞ் சொற்களை அள்ளி இரைப்பவர்கள் யார் தெரியுமா? டில்லிக்குக் காவடி

தேவிகுளம், பீர்மேடு முதலிய பகுதிகளை மீட்பதற்காகவும்—தட்சிணப் பிரதேச அமைப்பைக் கண்டிப்பதற்காகவும் அமைக்கப் பட்டுள்ள கூட்டணியின் மீதும் சீறி விழும் விடுதலை ஏடு—தேவிகுளம் பீர்மேட்டுக்காக நடத்தப்படும் கிளர்ச்சி தேவையற்றது என்றும் வாதிடுகிறது. அதே நேரத்தில் வழக்கம்போல் நமக்கு நடத்த வேண்டிய 'சகஸ்ர நாம' அர்ச்சனையையும் நடத்தி வருகிறது.

பிப்ரவரி 20-ந் தேதி பொது வேலை நிறுத்தத்தையும்—தமிழர் கிளர்ச்சியையும் கேலி புரிகிற விடுதலை இதழ், ஏறத்தாழ இருபது நாட்களுக்கு முன்பு நாட்டுக்குத் தந்துள்ள கருத்துரை என்ன என்பதைப் பாருங்கள்.

"நீண்ட நாட்களாக எதிர்பார்த்த பேரிடி விழுந்துவிட்டது. மொழி வாரி ராஜ்யப் பிரிவினை பற்றிய டில்லி சர்க்காரின் முடிவு வெளிவந்து விட்டது.

இனி அடுத்தபடி என்ன? தமிழ் நாட்டின் சர்வகட்சித் தலைவர்கள் அத்தனை பேரும் பிரசாரகர் யாவரும் - குறைந்தபட்சம் ஆயிரம் பேராவது சிறை புகக் கூடிய மாபெரும் கொந்தளிப்புக் கிளர்ச்சியொன்று உடனடியாக உருவாக வேண்டும்."

மேலிருப்பது, விடுதலையில் 17-1-56-ல் வந்த தலையங்கம்.

ஊரில் தீப்பற்றி எரியும்போது பகைவர்கள் உட்பட பல வீட்டாரும் ஒன்றுபட்டுத் தீயை அணைப்பது இல்லையா? அது போலத்தான் இன்றுள்ள 3, 4, முக்கிய பிரச்சனைகளில் பலகட்சித் தலைவர்களும் ஒன்றுபட்டு விரைந்து நடக்க வேண்டும்."

21-1-56. விடுதலை.

"தேவிகுளம் பீர்மேடு நம் உயிரும் உடற்பகுதியுமாகும்—" என்ற வரிகள் ஜன. 18-ந் தேதி விடுதலையிலே முன் பக்கத்திலே கொட்டை எழுத்துக்களில் பொறிக்கப் பட்டிருந்ததை "தேவிகுளம் நமது அப்பன் வீட்டு சொத்தா?" என்று கேட்கும் அருமைத் திராவிடக் கழகத் பிரச்சனைகளுக்காக ஒன்றுகூடும் நேரத்தில் — அந்தந்தக் கட்சிகளுக்கென இருக்கும் மூலக் கொள்கைகளை விட்டுக் கொடுப்பது என்பதும், அப்படி விட்டுக் கொடுக்குமாறு கேட்பதும் முறையற்ற செயலாகும். உலகவரலாற்றிலும் காண்பது அரிதாகும்.

நான்உனக்கு உதவி செய்தால் நீ என்ன தருவாய், என்று நிபந்தனை விதிக்கிற பிரச்சனை அல்ல; நம்மை நோக்கியிருக்கும் பிரச்சனை!

உன் மகனுக்கு என் மகளைக் கொடுத்தால் எவ்வளவு நகை போடுவாய்; என்று பேரம் பேசுவது திருமணப் பிரச்சனையிலே தான் காண முடியும்.

தெருவிலே குத்துண்டு கிடப்பவனின் உயிரைக் காப்பாற்ற உடனடியாக மருத்துவ மனைக்கு எடுத்துச் செல்ல, தெருவார் ஒருவருக் கொருவர் பேரம் பேசிக்கொள்வது வேதனை கலந்த வேடிக்கையாகத்தான் ஆகிவிடும்.

நிபந்தனை—பேரம் — ஒப்பந்தம் இவை யெல்லாம் சொந்த வாழ்வில் திருமண சமயத்தில் பேசலாம்! கேட்கலாம்! பொது வாழ்வில் தேர்தல் சமயத்தில் வைத்துக் கொள்ளலாம். தேவி குளம் - பீர்மேடு பிரச்சனையோ, தெருவிலே குத்துண்டு கிடப்பவனைக் காப்பாற்ற வேண்டிய பிரச்சனையைப் போன்றதாகும். இந்த நேரத்தில் கேலி, கிண்டல், வழக்கமான சமாளிப்பு இவை யெல்லாம் பயன்படாது!

"விடுதலை" கூறியது போலவே மூன்று நான்கு

சென்னை ராஜ்யத்தைத் 'தமிழகம்' என அமைக்க வேண்டுமென வற்புறுத்தப் பட்டிருக்கிறது. பொது மொழியாக ஆங்கிலமே இருக்க வேண்டு மென்று உடைந்தெரியும் முயற்சியிலே காமராசர். அவருக்கு உதவியாக குத்தூசியார்! "ஏன் கருடா சுகமா?" என்று கேட்கிறார்கள்; கிடைத்திருக்கும் இடம் நிலைத்திருக்கும் என்ற நினைப்புடன்!

பூனை வேட்டை யாடுவதற்கு நாங்கள் தயாராக இல்லை. ஆனாலும் "முள்ளும், கல்லும் நிறைந்த வேட்டைப் பாதை, சிறிது ஜாக்கிரதையாக வருக" என்று பின்னேவரும் தோழர்களுக்கு உணர்த்த வேண்டியது, முன்னே போகிறவர்களின் சடமையல்லவா?

கடமையின் பாற்பட்ட எச்சரிக்கை வழங்கப் பட்டு விட்டது!

கட்சிகள் அனைத்தும் களத்திலே இறங்கிவிட்டன.

மொழிவாரியாகப் பிரிந்து, இனவாரியாகஒன்றுபட்டுத் தனியரசு பெறப் போராட்டம் நடத்தும் திராவிட முன்னேற்றக் கழகம், இந்த மொழிவழி அமைப்பிலே உள்ள கோணலைச் சரிப்படுத்தக் கோரி—கொட்டடா முரசம், கோடையிடியென என்றுஅறிவித்துவிட்டது!

கேரளப் பகுதியிலே திணிக்கப்படும் நமது பகுதிகளை-நமக்குரிய பகுதிகளைத்தான் — நாம் கேட்கிறோமே தவிர, திராவிடர் என்ற இனச்சொல்லை மறந்து, மலையாள மாந்தர்களை ஒழிந்து போகச் சொல்லியோ, அல்லது அவர்களைப் புண்படப் பேசியோ, கிளர்ச்சியின் பாதையையும், குறிக்கோளையும் மாற்றிட முனைகிறோமில்லை!

திராவிடக் கூட்டாட்சியிலே, ஆந்திரர், கேரளர், கன்னடியர் நிறுத்தத்தின் போதும், அதைத் தொடர்ந்து நடைபெற இருக்கிற பிற போராட்டங்களின் போதும் தமிழ்ப் பகுதிகளை மீட்பதற்கான உணர்ச்சிதான் தீயெனப் பரவ வேண்டுமே தவிர, மலையாளி—தமிழர் மனமாச்சரியத்தை வளர்ப்பதான சூழ்நிலைகள் உருவாகுதல் கூடாது என்றுதான் திராவிட முன்னேற்றக்கழகம் கருதுகிறது. கழகத்தின் கொள்கைகளை மனதிலிறுத்தி, கட்டளைகளை செயல்படுத்தி, பிப்ரவரி இருபதை வெற்றிகரமாக ஆக்கும் பணியிலே வீரர்கள் அணிவகுத்து நிற்கின்றனர். அந்த அணிவகுப்பின் தும் குருடராகி விட்டார் என்றுதான் பொருள்! அவரை ஆதரிப்பவர்கள் கண்ணை விற்று சித்திரம் வாங்கிவிட்டார்கள் என்றுதான் அர்த்தம்!!

தமிழக வீரர்களே! திராவிட தீரர்களே!! சகல கட்சி அணி வகுப்பே!!

போர் முரசம் ஒலிக்கட்டும்—
பொல்லாங்கு தொலையட்டும்!
கோழைகள் விலகட்டும்;
வீரர்கள் பின் தொடரட்டும்!
வெற்றி! வெற்றி!!

பாய்ந்தெழுவீர், பட்டாளத் தோழர்களே!

கண்களும் காட்சியும்!

கற்காலத்துச் சிறப்பு என்ன வென்று [illegible] பாருங்கள், நிர்வாணக் கோலம் என்று பதில் சொல்லி விடுவான் சரித்திரத்தைப் புரட்டக் கற்[illegible]ட மாணவன்!

ஆடையணியாத மனிதன் தெருச்சந்தி[illegible]ட்டும்! பைத்தியக்காரனைத் தவிர மற்றவர்கள் இப்படிச் செய்யத்துணிந்தால் போலீஸ் ஸ்டேஷ[illegible]ன் செல்ல வேண்டும்!

பல ஆண்டுகளுக்கு முன்னர் நிர்வாண[illegible]யொருத்தியை நாட்டியமாடச் செய்த கூட்டத்தினர் கைது செய்யப்பட்டு, காவலில் வைக்கப் பட்டனர், [illegible]நகரத்தில்!

ஆனால் குடந்தையிலோ கோவணமில்ல[illegible]ார்களுக்கு குதூகல வரவேற்பு தரப்பட இருக்கிறது, இப்போது!

பைத்தியக்கார விடுதிக்கு அனுப்பப்ப[illegible]வர்கள் பூரண கும்ப மரியாதைக்கு பாத்திரமாகின்றனர்!—இதற்கு அனுமதியும் அளித்திருக்கி[illegible]க் காமராசர் அரசாங்கம்!

காமராசர் என்ன; அவர் தலைவர் நேரு[illegible]க்தெருவில் நிர்வாணமாய் நின்றால் 'நியூசன்ஸ்' வழக்கு போட்டு அவர்களை நீதிமன்றத்[illegible]ழுத்துவரும் உரிமை சாதாரண போலீஸ் உத்தியோகஸ்தருக்கு இருக்கிறது.

ஆனால் மத மென்னும் கவசம் சட்டம்[illegible]த்து அனுப்பும் கூர் மழுங்கா ஈட்டியைத் தடுத்து விடுகிறது!

"பகுத்தறிவுள்ள பெண்கள் நல்ல பா[illegible]ட்டின் கண்கள்" என்ற இசைத்தட்டு சங்கீதம் கேட்டவர்கள் இன்று அந்தக் கண்கள் குருடா[illegible]சியைக் காண வேண்டியவர்களாகிறார்கள்!

சோவியத் நாட்டின் சோபிதத்தைக் [illegible]ளித்த விஜயலட்சுமி—ஆசிய ஜோதியின் செவிகளில் தேன் பாய்ச்சும் கோகிலவாணி—

அப்பாவின் அன்புறவைப் பேணும் இ[illegible]

முருகா, முருகா என்று உருகா நி[illegible]த்தாரம்பாள்—

—இந்தப் பெண்களும் பாரத நாட்டி[illegible]கள்தானே? அவர்களுக்கு இந்தத் தேசியத் தார் ஆட்சி பீடம் குடந்தையின் கோர[illegible]யைக் காட்டியா பெருமை தேடிக் கொள்ள வேண்டும்?

அய்யோ, காமராசரே! நீருமா இன்[illegible] சென்று காண வேண்டும்!

மு. க. வின் நிகழ்ச்சிகள்	**கோவை**
12-2-56 சென்னை கோகலே மண்டபம்	**சிதம்பரம் பூங்காவில்**
16-2-56 சென்னை 14-வது வட்டம்	★
19-2-56 கோவை	12-2-56 மாலை 6—மணிக்கு
குறிப்பு:— 11-2-56 அன்று ஒத்துக் கொண்டிருந்த மதுராந்தகக் கூட்டத்தை அவ்லூர் செயலாளரே ரத்து செய்துவிட்டார்.	பேசுவோர்: நாஞ்சில் கி. மனோகரன் ப. சண்முகநாதன்

★

விற்பனையாகிறது !

'பிப்ரவரி-20'

[அறிஞர் சி. என். அண்ணாதுரை, எம். ஏ.]

விலை 0-4-0

கிடைக்குமிடம் :

திராவிடப் பண்ணை

தெப்பக்குளம் : : திருச்சி

புலிக்குரல் கேட்குது!

காஞ்சி
19-1-56

ஆசிரியர் அவர்களுக்கு,

முடிசூடா மன்னனின் முடிவான தீர்ப்புக் கூறியாகிவிட்டது! ஆசியாவின் ஜோதி தமிழரின் உள்ளத்தைச் சூடேற்றிவிட்டார்! தேவிகுளம் பீர்மேடு தமிழருக்கு இல்லையாம்! சித்தூர் தமிழ்ப் பகுதி செந்தமிழருக்குச் சேராது! திருத்தணிப் பகுதியும் செங்கோட்டைப் பிரதேசமும் பறிக்கப்பட்டு விட்டன!

"அகில உலகப்புகழ், சமாதான தூதுவர், அகிம்சாமூர்த்தியின வாரிசு, அசோகச் சின்னத்தின் அதிபர், ஆளவந்தாரின் தலைவர்" என்றெல்லாம் புகழப்படும் நேரு பண்டிதர் கூறிவிட்டார் மேற்கூறிய தீர்ப்பை!

முன்புடால்மியாபுரத்தைத் தகர்த்தெறியச் சென்றோம்! முட்டுக்கட்டையாயினர் மாடடுப்பெட்டியினர். இந்தியை எதிர்த்துப் போர் தொடுத்தோம் — மண்ணெண்ணை தூசகி வந்தனர்! கட்டாயக் கல்விக்குக் கண்டனக் குரலெழுப்பினோம்!

வீடு பற்றி எரிகிறது! வேண்டாம் நமக்குள் விரோதம் நமது குடும்பச் சண்டையைப் பிறகு கவனிப்போம் — முதலலே கொழுந்து விட்டெறியும் நெருப்பைக் குருதி கொட்டியேனும் அணைப்போம்! தமிழனின் தன்மானம் தரணியோர் அறிய தக்கதோர் வாய்ப்புக் கிடைத்திருக்கிறது! சட்டையின் நிறம்கண்டு சஞ்சலம் கொள்ளும் நேரமல்ல இது!

ஆந்திரரும், கேரளரும் அன்னியர்களல்ல நமக்கு. அவர்களுக்கும் நம்மிடத்தே பாசமில்லாமலுமில்லை. ஆனால் வடநாட்டு ஏகாதிபத்தியம் நமது வளமான வாழ்வைக்கண்டு வஞ்சம தீர்த்துக் கொள்கிறது. நமது சுமுகமான வாழ்வைச் சூறையாட நினைத்துள்ளது. தமிழருடன் ஆந்திரரும் கேரளரும் ஒன்றி வாழ்ந்திருக்கத் திட்டமய சதியின் முடிவுதான் நேருவின் முடிவு! ஆகவே டில்லி ஏகாதிபத்தியத்திற்கு காட்டுங்கள் நமது எதிர்ப்பை!

கனக விசயன் தலையிலே கல்லேற்றிக் களித்த மறத் தமிழன் மரபில்வந்த மாண்பு கொண்ட தமிழினமே! பாகிஸ்தான் பிரிவு கண்டு பதறித் துடித்தீர்களே! கோவா எழுச்சி கண்டு கொதித்தெழுந்தீர்களே! புதுவைப் புரட்சியைப் பார்த்துபுயலெனக் கிளம்பினீர்களே! இன்று தமிழ்நாட்டின் எல்லை தவருக வரையப்பட்டிருப்பதை மாற்றி அமைப்போம் வாரீர்!

சீறிவரும் புலியென வீறு கொண்டு மறத் தமிழன் மானம் காக்க மாபெரும் படை திரண்டு விட்டது!

கலிங்கத்துப் போரிலே அசோகனுக்குக் கண் திறந்துவிட்ட உன் மூதாதையரை எண்ணிப்பார்! புறநானூறு உனது முன்னோர்களின் வரலாறு என்பதை மறந்துவிடாதே! இமயத்திலே கொடி பொறித்தது உனது இனம்தான்! சாவகமும், யவனமும் சான்று கூறுகின்றது உன் பெருமைக்கு! ரோமாபுரியை அழகு படுத்திய உனது இனத்தை அழித்தொழிக்க நினைக்கும் அலகாபாத் பண்டிதரின் ஆணவத்தையடக்க ஆட்சிபீடம் விட்டிறங்கி போர்ப் படைக்குத் தலைமை தாங்கு! செக்கிழுத்த சிதம்பரமும் தாய் மொழி காக்க கல்லறை கண்ட தாளமுத்து நடராசனும், கொடி காக்க குருதி கொட்டிய திருப்பூர் குமரனும் தமிழினமென்றால்-உன் தோள்கள் தினவெடுக்க வில்லையா?

எனவே தமிழ் நாட்டில் பிறந்து, தமிழ்ப் பாலுண்டு, தமிழ் இரத்தம் ஓடும் ஒவ்வொரு தமிழனும் இன உணர்வோடு உறக்கத்தினின்றும் எழுந்து ஏகோபித்த குரலிலே பண்டிதரின் சண்டித்தனத்திற்குக் கண்டனக் குரல் கிளப்பி, புதுவைக்குயில் கூவியது போல, 'எட்டா கொலைவாளினை மிகுகொடியோர் செடல் அறவே' என வாளேந்தி இரத்தம் பாய்ச்சி வாகைசூடி வருவோம்!
வாழ்க தராவிடம்! வாழ்க தமிழ்!!

அன்பன்
எஸ். டி. தின்.

★

சென்னை
24-1-56

செய்வார்களா ?

ஆசிரியர் அவர்களுக்கு,

வணக்கம். ரஷ்யா, சீனு போன்ற வெளிநாடுகளிலிருந்து வரும் கலாசார தூதுக்குழுவினரின் இசை, நடனம் முதலான நிகழ்ச்சிகள், சென்னையில் அண்ணாமலை மன்றத்தில் ஒருநாளும் திருவல்லிக்கேணி கலாமண்டபத்தல் இரண்டு நாட்களிலும் நடைபெற்று வருகின்றன. திருவல்லிக்கேணி கலா மண்டபத்தல் நடைபெறும் இரு நிகழ்ச்சிகளில் ஒன்றை வட சென்னையிலுள்ள சர் தியாகராயர் கல்லூரி திறந்தவெளி அரங்கிலும் நடைபெறச் செய்தால், அங்கு வாழும் பெரும்பான்மையான நடுத்தர—ஏழை மக்களும் பார்க்கச் சந்தர்ப்பம் கிடைக்கும். இதைச் சம்பந்தப்பட்டவர்கள் கவனித்து இனிமேல் நடைபெறும் நிகழ்ச்சிகளிலாவது இக் கருத்துப்படி ஆவன செய்வார்களென்று நம்புகிறேன்,

அன்புள்ள,
காந்தாமணி புஷ்பரத்தினம்.

தமிழ் வளருது-ரஷ்யாவில்!

★

"எங்களுடைய நாட்டில் ரஷ்யர்கள் தமிழ் கற்க ஆரம்பித்திருக்கிறார்கள்" பெருமையோடு இந்த வாசகங்களைச் சொன்னாராம பிரபல ரஷ்ய எழுத்தாளரான ஹில்யா எரன்பர்க் என்பவர்.

உலக மொழிக் கூட்டத்தின் ஒளிமுத்தாம் தமிழின் மேன்மையையும்— இலக்கிய வளத்தையும் உக்ரேய்ன் பிரதேசத்து மனிதர்கள் கூட உணர்ந்து இருக்கிறார்கள் என்பதை அறிய நம் சிந்தையெல்லாம் பூரிப்பால் பெருமிதமடைகிறது.

நான் தமிழன்—தமிழ் என் தாய் மொழி, என்போரெல்லாம் இதயத்திலே தேன் விருந்தைப் போலக் களிப்படைவர் இந்த செய்தியைக் கேட்ட அளவில்!

அகமும்—புறமும் பாடிய அருந்தமிழ்ப் புலவர்களை, புலி—வில்—கயல் கொண்டோரின் போர் முறைகளை, பொன்னான கருத்துக்களை-படித்துப் படித்து-இப்போது அப்படிப்பட்ட ஒரு இனம் உலகத்தின் எந்த மூலையிலே இருக்கிறது என்று தமிழ் படிக்கும் அந்த ரஷ்யத் தோழர்கள் வர ஆரம்பித்து விட்டாலும் நாம் ஆச்சரியப் படுவதற்கில்லை!

கோபுரத்தின் உச்சியிலே—உலகத்தின் கண்களுக்கு விருந்தளித்தபடி—சுடர் வீசிப் பறந்து கொண்டிருந்த தமிழகத்தின் கொடி எங்கே? எங்கே? என்று வானமண்டலத்தை நோக்கி விழிகளை உயர்த்தினாலும் நாம் வியப்படைவதற்கில்லை!

தமிழின் சுவை குடிக்கத் தொடங்கி இருக்கும் அந்தத் தோழர்கள், இப்படி வளமிக்க இலக்கியங்களைப் பெற்றிருக்கும் தமிழுக்கு இந்திய அரசியலிலே எத்தகைய இடம் தந்திருக்கிறார்கள் என்று ஆராயத் தொடங்கலாம்!

இமயத்தின் மார்பிலே வேல்பாய்ச்சி நின்றார்கள் தமிழகத்து மன்னர்கள், என்று அவர்கள் படிக்கும்போது; இன்றேன் அந்த மறக்குடியினர், கூனிக் குறுகித் தேய்ந்து தேய்ந்து, துரும்பினும் கீழாகிப் போனார்கள், என்ற எண்ணம் அவர்களுக்கு எழத்தான் செய்யும்.

இந்திய மண்ணிலே உலா நடத்திய புல்கானின்—குருஷேவ், ஆகியவர்களுக்குத் தரப்பட்டிருக்கும் வரவேற்புப் பத்திரங்களைப் புரட்டிப் புரட்டிப் பார்த்து, சீர்மிக்க ஒரு மொழியிலே தங்கள் தலைவர்களுக்கு வரவேற்பு வழங்கபபட்டிருக்கிறதா என்று தேடிப்பார்த்து ஏமாற்றம் அடைந்தவர்கள், அரசகூடத்தில், இந்தத் தமிழுக்கு சரியாசனம் இல்லைபோல் இருக்கிறது என்று எண்ணி வருந்தலாம்!

அவர்களுக்கு என்ன தெரியும், தமிழிலேயே வளர்ந்த சிலரும் தமிழை மறந்து விட்டு 'தகாத மொழி' யொன்றைத் 'தந்தை சொத்து' என்று துதிபாடி வாழ்கின்றனர் என்பது!

'உலகெலாம் தமிழ் மொழியைப் பரப்ப வேண்டும்' என்று சொன்னார் பாரதி என்றால் — உள்ள கீர்த்தியையும் ஒரு சில புலவர் பெருந்தகையாளர் கெடுத்துத் திரிகிறார்கள்!

சாகுந்தலமும்—ராமகாதையும்தானே நாங்கள் கேள்விப்பட்ட இலக்கியங்கள் என்று சொன்னவர்கள் எல்லாம்—

இதோ ஒரு பூக்காடு-என்று தமிழ் இலக்கியச் சோலையில் ஆர்வத்தோடு நுழைவதைக் காண்கிறோம்!

துரோபதையையும், சீதையையும் மட்டுமே தெரிந்தவர்கள், 'முடி நடப்போனுனே உன் கணவன்' என்று வேடிக்கைக்குக் கேட்டவளைப் பார்த்து 'முடி நடத்தான் போனானடி! ஆனால் நீ நினைத்துக் கொண்டிருக்கிறாயே அந்த முடியை அல்ல! இடம் தெரியாமல் மோத வரும் ராஜாக்கள்ன் மணி முடிகளைப் பிடுங்கி ரத்தச் சேற்றிலே நடத்தான் போயிருக்கிறான் என் கணவன்!" என்று வீரச்சொல் சிந்திய தமிழகத்து 'ஜோன் ஆப் ஆர்க்'குகளைக் கண்டு பூரிப்படைகிறார்கள்!

தமிழ்-ரஷிய மண்ணிலே வரவேற்கப் படுகிறது!

ஆனால் தமிழகத்திலே தமிழுக்குத் தக்க இடம்—கொடுக்கப்படவில்லை,

கார்டுகளில் இந்தி! ரூபாய் நோட்டுகளில் இந்தி! ராணுவத்தில் இந்தி! நாணயங்களில் இந்தி! நாயகம் கெட்டோரின் பேச்சிலே இந்தி!

புரட்சிக் கோவிலுக்கு பொன்கலசமிட்ட ஸ்டாலினின்-பரிசு பெற்றவரும், உலக சமாதான கவுன்சிலின் துணைத் தலைவருமான எரன்பர்க், மவுண்ட்ரோட்டில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் பேசும்பொழுதுதான் மேலே தரப்பட்ட கருத்தை வெளியிட்டார்.

ரஷ்யர்களும் தமிழ் படிக்கிறார்களாம்—கேட்டாலே இனிக்கிறது! தமிழ் கெடுக்க வருவோரின் துடுக்கடக்கும் துணிவு இம் மாநிலத்து 'துரை மார்'களுக்கு இனியாவது ஏற்படுமா ?

★ பர்க்-ஒரு பாடசாலை! ★

ஐரோப்பிய நாடுகளுக்கெல்லாம் அரசியல் சுவடியைப் புரட்டக் கற்றுக் கொடுத்த பெருமை கிரேக்க நாட்டிற்கே சொந்தமானது என்று சரித்திரக்காரர்கள் குறிப்பிடுகிறார்கள்.

உலகத்தின் தலைசிறந்த தத்துவ ஞானியாம் சாக்ரடீஸ் தவழ்ந்ததும் அந்த மண்ணிலே தான் அவன் அடிச்சுவட்டைப் பின்பற்றி, அவன் போதித்த கருத்துக்களையே தன் வாழ்வின் கலங்கரையாகக் கொண்டவன் அரசியல் மேதை அரிஸ்டாடில்! கலைக்கோயிலின் தலைவாயிலில் நின்ற அந்த அரசியல் மேதையின் கருத்துக்கள் நிழலாடாத சட்ட புத்தகங்களே ஐரோப்பிய நாடுகளில் இல்லையென்று கூறலாம்.

அந்த அரிஸ்டாடலின் வரிசையிலே, அரசியல் விற்பன்னர்களால் மதிக்கப் பட்டவன் தான் எட்மண்ட்பர்க்!

பேச்சு வன்மையிலே தமிழகத்திற்கு அண்ணாவைப் போல, இங்கிலாந்திலே எட்மண்ட் பர்க் சக்தி வாய்ந்த நாவலன் என்று கருதப்பட்டான்.

சொல்லுக்குச் சொல் சுவை கூட்டி, கேட்பவர்களின் நரம்புகளில், உணர்ச்சியலைகளை மீட்டிவிவான்!

எட்மண்ட் பர்க் பேசுகிறான் என்றால், சட்ட சபையில் இருக்கும் எதிர்க்கட்சியினருக்கு கிலி பிறந்துவிடும்!

★

1729-ல் அயர்லந்தின் தலைநகரான டப்ளினில்-மேதைகள் வழக்கமாக உதயமாகும் மிக மிகச் சாதாரண குடும்பத்தில் பிறந்தார். லண்டன்மா நகரிலே வழக்கறிஞருக்குப் பயின்றார். ஆங்கில இலக்கிய உலகிலும் புகழ் முத்துக்களைப் பெற்றார். அப்பொழுதே ஆளவந்தாரின் கவனத்தை தன் பக்கம் திருப்புகின்ற அளவிற்கு பேச்சுக் கலையை வளர்த்துக் கொண்டார்.

1765 ஆம் ஆண்டு ராக்கிங்ஹாம் முதல் மந்திரியானதும், அவருக்கு செயலாளரான பர்க்-அவ்வருடமே பிரிட்டிஷ் பாராளுமன்ற உறுப்பினரானார்,

பாராளுமன்றத்தில் பர்க் நிகழ்த்திய உணர்ச்சிமிக்க சொற்பொழிவுகள் மந்திரியாக இருந்த இளைய பிட் என்பவரைக் கவர்ந்தது.

சில ஆண்டுகளில் ராணுவ மந்திரியான பர்க் பிறகு நிதி மந்திரியானார்.

தன் திறமையால் படிப்படியாக உயர்ந்து நிதிமந்திரியான பர்க் இந்த நேரத்திலேதான் உலக நாடுகளுக்கு தன்னை அறிமுகப்படுத்தி வைக்கும் பயனுள்ள காரியங்களைச் செய்தார்.

நிதிமந்திரியானதும் அவர் சிந்தனை தீவிரமாக வேலை செய்ய ஆரம்பித்தது அப்பொழுது பிரிட்டனில் மக்களிடையே நிலவி வந்த அதிருப்தியையும் அதற்கான காரணங்களையும் விளக்கி 'தற்கால அதிருப்தியின் காரணங்களைப் பற்றிய கருத்துக்கள்'' என்று ஒரு நூல் எழுதி மக்கள் மன்றத்தின் பாராட்டுதலையும் அரசியல் வட்டாரத்தில் பெருமதிப்பையும் பெற்றார்.

''மக்களின் அதிருப்திக்கு-அரசியல் சட்டத்தின் குறைபாடுகளும், நிர்வாக ஊழல்களுமே மூல காரணம்'' என்று பர்க் அந்த ஏட்டிலே குறிப்பிட்டிருந்த வாசகங்கள் - ஆதிக்க பீடத்தை நோக்கி மக்களை முகம் திருப்பச் செய்தது.

''சமூக நிலையை அடிப்படையாகவைத்தே அரசியல் வாதிகள் முன்னேற்ற முயற்சிகளில் ஈடுபட வேண்டும்'' என்ற அவர் கருத்து சமுதாயத்தின் குறைகளை, நோக்கி அரசியல் வாதிகளைக கண் திறக்கச் செய்தது!

வெறும் பொருளாதார முன்னேற்றம் மட்டும் ஒருநாட்டின் வளர்ச்சிக்கு அறிகுறியாகாது சமுதாயத்திலும் மறுமலர்ச்சி அரும்ப வேண்டும் என்பது பர்க்கின் கருத்து. 1789-ல்நடந்த பிரஞ்சுப் புரட்சி எட்மண்ட் பர்க்கின் சிந்தையைக்கவர்ந்தது.

18ம் நூற்றாண்டில் சீர்குலைந்திருந்த பிரான்சில், பணத்திமிரும் இனத்திமிரும் கைகோர்த்துக் கொண்டிருந்தன. கடமை, கண்யம், இவற்றை மறந்து விட்டு காட்டு ராஜாக்களென கொட்டம் அடித்துக் கொண்டிருந்தனர் பிரபுக்கள்! சீமானின் தயவு பெறுவதற்காக ஒழுக்கத்தை மறந்து உலவிக் கொண்டிருந்தனர் குருமார்கள்; புழுவெனத் துடிக்கும் ஏழை புழுங்கிக் கொண்டிருந்த நடுத்தர வர்க்கம், இவர்களைப் புல்லென மதித்து திமிர்வாதம் பேசித் திரிந்த 'போர்பன்' வம்சத்து கொடுங்கோலர்கள்! இந்த நிலைதான் பிரான்சிலே பயங்கர சூழ்நிலையை வளர்த்துக்கொண்டிருந்தது.

வால்டேர் — மாண்டெஸ்கியூ போன்ற சீர்திருத்தக்காரர்கள் புதிய கருத்துக்களைப் புரட்சி நடையிலே மக்களிடையே பரப்பி வந்தார்கள்!

காட்டாட்சியை எதிர்த்து மக்களிடையே வளர்த்து வந்த புரட்சிக் கருத்துக்கள் வெற்றியடைந்ததை பர்க் வரவேற்றார்.

★

பிரஞ்சுப் புரட்சியைப் பர்க் ஆதரிக்கவே சீமான்களின் கண்கள் சிவப்பேறின! அதன் காரணமாகவே, விக்கட்சியின் பிரமுகர்கள் பலர் எட்மண்ட் பர்க்கிடமிருந்து விலகிச் சென்றனர். பாக்ஸ், ஷெரிடன், போன்ற நண்பர்கள் கூட பர்க்கிடமிருந்து தங்கள் நட்பை துண்டித்துக் கொண்டனர்

புதுமைக் கருத்துக்களை ஆதரித்தும், புரட்சியின் அவசியத்தை விளக்கியும் 1790ல் 'பிரஞ்சுப் புரட்சி எழுப்பிய சிந்தனை' என்ற ஒரு நூலை வெளியிட்டார். ஐரோப்பிய நாடுகளெல்லாம் பர்க்கை நோக்கி முகம் திருப்பின, அரசியல் வாதிகள் அந்த ஏட்டின் ஒவ்வொரு வார்த்தைக்கும் புதுப் பொருள் ஏதாவது இருக்குமோ? என்று தேடிக் கொண்டிருந்தனர்.

இந்த நேரத்தில்தான் பெட்போர்டு பிரபு. இளையபிட், எட்மண்ட் பர்க்கிற்கு அளித்து வந்த உபகாரச் சம்பளத்தை எதிர்த்தார். இந்தச் செய்தியைக் கேட்ட பர்க் ''கண்யவானே! உன் முயற்சிக்கு என் நன்றி! இதைத் தவிர எனக்கு வேறென்ன நன்மையைச் செய்யப் போகிறாய் நீ! என் நண்பனல்லவா—இதற்குக் கூடவா உனக்கு உரிமையில்லை! செய் நண்பனே! இதயம் குளிரச் செய்து கொண்டிரு'' என்று கடிதம் எழுதினாராம் பெட்போர்டு பிரபுவற்கு!

உடன் இருந்த நண்பனை தன் வாழ்விற்கு குழிபறிக்கத் துணிந்துவிட்ட, இச்செயலை எண்ணி எண்ணி கொதிப்படைந்தார்-பர்க்.

இந்த நேரத்தில்தான் பர்க் உயிருக்கு உயிராக கருதி வளர்த்து வந்த தன் ஒரே மகன், பாசத்திற்குரியவன் — பிரிந்துவிட்ட சம்பவம்அவரை நடைப் பிணமாக்கிற்று..

துயரமேகங்கள் அந்த அரசியல் மேதையை சூழ்ந்து கொண்டன.

1797-ல் தமது அறுபத்தெட்டாவது வயதில்-பழகிக் கொண்டிருக்கும் போதே பாதகம் நினைக்கும் பெட்போர்டுகள் இல்லாத இடத்திற்குப் போய் விட்டார். என்றாலும் எட்மண்ட்பர்க்-இந்தப் பெயர் அரசியல் அரங்கு கலைஉலகம்-பேச்சு மேடை, இந்த மூன்று இடங்களிலும், இன்றளவும் சுடர் விடும் தங்க விளக்கென அறிஞர் கூட்டத்தில் அழகு சேர்க்கிறது.

''நிர்வாகத்தின் திறமை மந்திரிகளின் நேர்மையையும்—அறிவையும் பொறுத்திருக்கிறது. மந்திரிகளும்-பாராளுமன்ற உறுப்பினர்களும் மக்களின் குரல்கள்! அந்நிலையை உணர்ந்து அவர்கள் செயலாற்ற வேண்டும் எத்தகைய தீமையை பொறுத்துக் கொள்ளலாம், அல்லது தீமையின் எத்தகைய பாகத்தை தாங்கிக் கொள்ளலாம் என்று மதிப்பதே அரசியல் ஞானத்தின் முதல் பகுதியாகும். ஏனெனில் சிக்கலை ஒழிக்க எடுக்கும் முயற்சியால் எதிர்பாராத—புதிய சிக்கல்கள் எழுந்து, மக்களின் வாழ்க்கையைப் பாழ்படுத்தும். புதிய ஊழல்கள் எழும்''

'தற்கால அதிருப்தியின் காரணங்களைப் பற்றிய கருத்துக்கள்' என்ற நூலில் எட்மண்ட் பர்க் குறிப்பிட்டிருக்கும் வாசகங்கள்தான் மேலே தரப்பட்டிருப்பவை.

எல்லையை சீரமைப்பதற்கென குழு அமைத்த சர்க்கார்-பர்க்கின் இந்தக் கருத்துக்களை உணர்ந்திருந்தால் 'பாட்னாவும்' பம்பாயும்' உருவாகி இருக்காதல்லவா!

சிக்கலைத் தீர்க்க வந்தவர்கள் புதிய சிக்கல்களை உண்டாக்கி விட்டு, சமாளிக்க முடியாத அளவிற்குத் திரண்டிருக்கும் எதிர்ப்பைத் தழுவ வேண்டிய பரிதாபம் ஏற்பட்டிருக்காதே!

பாரத சர்க்காருக்கும்-அதற்கு பராக்கு கூறிக் கொண்டிருக்கும் சென்னை அமைச்சர்களுக்கும் எட்மண்ட் பர்க் குறிப்பிடும் 'அரசியல் ஞானம்தான்' எட்டாத நிலவாக இருக்கிறதே; நாம் என்ன செய்வது?

★

★ 'தீச்சுடர்' நிதிக்காக ★

சென்னை கோகலே மண்டபத்தில்

12--2--56 ஞாயிறு காலை 10 மணிக்கு

பேச்சாளர்கள் :

இரா. நெடுஞ்செழியன், எம். ஏ.,
மு. கருணாநிதி
டி. கே. சீனிவாசன்
சி. பி. சிற்றரசு

நன்கொடை: அணு; 0-8-0, 0-4-0.

சென்னை
(8-வது வட்டம்)
10—2 56
அறிஞர் அண்ணா
பேசுவார்.

★

மீர்சாகிப் பேட்டை
11--2 56
டி. கே. சீனிவாசன்
பேசுவார்.

★

குத்தாலம்
11—2-56
தோழியர்: சத்தியவாணிமுத்து
தோழர் ; என். கிட்டப்பா
தோழ : இராமானுசம் எம். சீ.
ஆகியோர் பேசுவார்கள்.

★

செங்கற்பட்டு
11—2—56
தோழியர்: அருண்மொழி பி ஒ எல்
தோழர்: ஆர். எஸ். பாண்டியன்
ஆகியோர் பேசுவர்

★

செங்கம் (வ. ஆ.)
12-2-56
பேராசிரியர்
க. அன்பழகன் எம். ஏ.
பேசுவார்.

★

திருப்பத்தூர் (வ. ஆ.)
12-2—56
தோழர் கே. ஏ மதியழகன் பி. ஏ.
„ முல்லை சக்தி
„ ப. உ. சண்முகம்
„ போளூர் சுபரமணியம்
„ ஏ. கே. வில்வம்
ஆகியோர் பேசுவர்

★

இராணிப்பேட்டை (வ. ஆ.)
13—2—56
துணைப் பொதுச்செயலாளர்
தோழர்: என. வி. நடராசன்
பேசுவார்.

★

சென்னை (ஏழுகிணறு)
14-2-56
தோழர்; கே. ஏ மதியழகன் பி.ஏ.
பேசுவார்.

★

திருச்செங்கோடு
15—3—56
தோழர் : சி பி. சிற்றரசு
பேசுவார்

★

சென்னை 14-வது வட்டம்
16-2-56
வியாழன் மாலை 7-மணிக்கு
துணைப் பொதுச் செயலாளர்
தோழர்: என. வி. நடராசன்
„ மு. கருணாநிதி
மற்றும் பலர் பேசுவர்.

★

திருக்கடையூர்
17—2—56
தோழர் : சி. பி. சிற்றரசு
„ என். கிட்டபபா
„ சி ஐம்ப
ஆகியோர் பேசுவர்

பிப். 20-பொது வேலை நிறுத்தம்!

மாணவர்களே! அணிவகுப்பில் திரளுவீர்!

★

பிப்ரவரி 20! பொதுவேலை நிறுத்த நாள்!— என்று தமிழகத் தலைவர்களின் கூட்டணி முரசறைந்திருப்பதை தமிழக மாணவா சமுதாயம் நன்கு உணரும்!

(1) தேவிகுளம், பீர்மேடு, நெய்யாற்றங்கரை, கொச்சி-சித்தூர், பாலக்காடு ஆகிய தாலுக்காக்களிலுள்ள தமிழ்ப் பகுதியும், வடக்கே சித்தூர் மாவட்டத்திலுள்ள தமிழ்ப் பகுதியும் புதிதாக உருவாகும் தமிழ் மாநிலத்தோடு இணைக்கப்பட வேண்டும் என்ற உரிமை வேட்கையை எடுத்துரைக்கவும்.

(2) அதற்கான நடவடிக்கைகள் எடுக்குமாறு சென்னை அரசியலாரையும், இந்திய அரசியலாரையும் வற்புறுத்தவும்,

(3) தட்சிணப் பிரதேச யோசனைக்குக் கண்டனம் தெரிவிக்கவும்,

(4) புதிதாக உருவாகும் தமிழ் மாநிலத்திற்கு தமிழ்நாடு என்று பெயரிடும்படி வற்புறுத்தவும், **பொதுவேலை நிறுத்தம் பிப்ரவரி 20-ல்** தமிழகத் தலைவர்களால் மேற்கொள்ளப் படுகிறது.

மத்திய சர்க்காரின் அநீதியை எதிர்த்துப் பொதுவேலை நிறுத்தத்தின் மூலம் எழுப்பப்படும் கண்டனகுரலில், மாணவர் சமுதாயத்தின் பெரு முழக்கமும் இணைந்திருக்க வேண்டியது இன்றியமையாததாகும். டில்லியின் தீர்ப்பு வெளிவந்தவுடனேயே மாணவர் சமுதாயம் தமிழரின் மனக் கொதிப்பை அகில உலகமும் அறியும் வண்ணம் ஊர்வலங்கள், வேலை நிறுத்தம் மூலம் தெரிவித்தது தி. மு. க. மாணவர் கிளை அதில் பெரும் பங்கு பெற்றது குறிப்பிடத் தக்கதாகும். தி. மு. க. மாணவர் கிளையின் தலைமை நிலையம் உரிமை வேட்கை காட்டிய எல்லா கட்சி மாணவர்களையும் இதுபோது பாராட்டி வாழ்த்தக் கடமைப் பட்டிருக்கின்றது.

பிப்ரவரி—20 நாட்டின் மன நிலையை மமதை நிறைந்த டில்லிக்கு உணர்த்தும் நாள்! அந்த நாள் ஆலைத் தொழிலாளர், உழவர் பெருமக்கள், வாணிகத் துறையினர், அலுவலகப் பணி புரிவோர், படித்தா வகுப்பினர் அத்தனைப் பேரும் அநீதிக்கு எதிரான அணிவகுப்பில் திரளும் நாள்! விடுதலைப் படையின் முன்னணியில் எப்பொழுதும் இருந்துவரும் மாணவர் சமுதாயம் பிப்ரவரி 20-ஆம் நாள் திரளும அணிவகுப்பில் முன்னணியில் இருந்து தீர வேண்டியது இன்றியமையாததாகும். அதற்கான தலைவர்களின் வேண்டுகோளும், தி. மு. க. பொதுக் குழுவின் ஆதரவும் கிடைத்துவிட்டது.

பிப்ரவரி 20-ல் பள்ளிகள், கல்லூரிகள், பல்கலைக் கழகங்கள் எல்லாம் மூடிக் கிடக்கட்டும்! நிலமையை மத்திய சர்க்கார் உணரட்டும்! அந்த அளவுக்கு மாணவர்கள் எல்லோரும் பொதுவேலை நிறுத்தத்தில் ஈடுபடுவார்களாக!

பிப்ரவரி 20-ல், பிற கட்சி மாணவர்களோடு கை கோர்த்துத், தோளோடு தோள் சேர்ந்து ஒத்துழைத்துப் பொது வேலை நிறுத்தத்தை வெற்றிகரமாக்க வேண்டும் என்று தி. மு. க. மாணவர் கிளைத் தோழர்களை குறிப்பாகக் கேட்டுக் கொள்வதோடு, பொதுவாக எல்லா மாணவர்களையும் கேட்டுக் கொள்கின்றேன்.

கடமை—கண்ணியம்—கட்டுப்பாடு—இவை அண்ணா அவர்கள் அறப்போர் வீரர்களுக்கு அளித்துள்ள ஆயுதங்களாகும். அவற்றைப் பெற்ற நமக்கு வெற்றியின்றி தோல்வி ஏது?

இப்படை தோற்கின் எப்படை வெல்லும்!
பிப்ரவரி 20 மானத்துக்கு அறைகூவல்!
மறந்துவிட வேண்டாம்!
மாணவர்களே! வெற்றி நமதே! என்று—பிப்ரவரி 20-ல் கொட்டுவீர் முரசம்!!

டி. கே. பொன்னுவேலு,
தி. மு. க. மாணவர் கிளை அமைப்பாளர்.

சூழல் விளக்கு...

★ 4-ம் பக்கத் தொடர்ச்சி

ஐசன்ஹோவர் கூட ஆண்டவன் பெயரைச் சொல்லிவிட்டு தான்-அரசியல் விவகாரங்களைப் பேசுகிறாராம்! பெரிய இடத்திலிருந்தே உதாரணங்களைப் பிடித்துக் கொண்டுவந்து பேசி இருக்கிறார் தோழர்.

இங்கிருக்கும் ராசேந்திரர் என்ன அவருக்கு இளைத்தவரா? காசிப் பார்ப்பனர்களுக்கு பாத பூஜை செய்ய தங்கத் தாம்பாளத்தையல்லவா தூக்கிக் கொண்டு ஓடுகிறார்.

அங்கே ஐசனோவர் ஆண்டவன் பெயரைச் சொல்லிவிட்டாவது—அறிவியலை நாளுக்கு நாள் வளர்த்துக் கொண்டு பொன் கொழிக்கும் பூமியாக்கி வருகிறார் தாயகத்தை.

இங்கிருப்பவர்கள்தான், 'நமப் பார்வதிபதே' என்று ஆரம்பித்து, 'அரகரமகாதேவா' என்பதோடு சிந்தனை கதவுகளை மூடிக்கொள்ளுகிறார்களே! என்ன செய்வது! ஃ

பிறைவானம்...

★ 11-ம் பக்கத் தொடர்ச்சி

கஞ்சி குடிக்கலாம்!" என்று அழைத்தாள்! இப்போது அவள் குரலிலே தென்பட்ட அன்பையும், ஆசையையும் கண்டு பாலையா வியந்தான்; அவளுடன் நடந்தான்.

★

அவசரமாக ஆலமரத்தடியில் இருந்த கஞ்சிக் கலயத்தை எடுத்தாள் வள்ளி. அண்ணனிடம் நீட்டினாள். பாலையா ஆசையுடன் வாங்கினான். குடிப்பதற்கு வாடருகில் கொண்டு போனான். ஆனால், மறு கணம் கலயத்தை வீசி எறிந்தான். கீழே விழுந்து உடைந்து சிதறியது கலயம். ஆனால் அதற்குள்ளிருந்து ஒரு சொட்டுக் கஞ்சிகூட வெளிவரவில்லை. வள்ளி சிலைபோல் நின்றாள். திடீரென்று அவள் கன்னத்தில் 'பளார்' என்று ஒரு அறை விழுந்தது. வள்ளி 'ஐயோ' என்று கத்திக் கொண்டு திரும்பினாள்.

எதிரே பாலையாதான் — சிவந்த கண்களுடன் நின்றான். "கழுதை! கஞ்சியைக் குடிச்சிட்டு வெறும் கலயத்தையா தர்றே! என்னைக் கிண்டல் பண்ணினத்துக்கு இந்தா, இதையும் வாங்கிக்கோ!" என்று கத்தினான். மீண்டும் மறு கன்னத்தில் அறைந்தான். வேகமாக நடந்தான்; மறைந்தான்.

வள்ளி அழுதுகொண்டே கீழே உட்கார்ந்தாள். யாருமில்லாத நேரத்தில் கலயத்தைக் காலி செய்துவிட்ட சொரிபிடித்த நாய் ஒன்று, சிதறிய கலயத்தின் ஓடுகளிலே ஒட்டிக் கொண்டிருந்ததையும் ருசி பார்த்துக் கொண்டிருந்தது.

—சொர்ணம்

தேவை!

'சிக்ஸ் ஓ கிளாக்' பற்பொடியை விற்பனை செய்ய எல்லா ஊர்களிலும ஏஜண்டுகள் தேவை மாதம் தோறும 15 ஜுவலஸ் கைகடிகாரம் போனசாக கொடுக்கப்படும். பாக்கட் விலை 0-1-0 விபரங்களுக்கு 2-அணா ஸ்டாம்பு அனுப்பவும்.

'சிக்ஸ் ஒ கிளாக் பற்பொடி ஒர்க்ஸ்'
7, ரிட்சி தெரு, மவுண்ட்ரோடு
சென்னை—2

"ஏ... வள்ளீ...!"

ரிக்ஷாக்கார ராஜு அடித்தொண்டையிலிருந்து கத்தினன், ஆலமரத்தடியிலிருந்து. ஆலமரமென்ரு சொன்னேன் — இல்லை; இல்லை — அவனது மாளிகையிலிருந்து! உண்மைதான்: தெருவோரத்திலிருந்த அந்த மிகப் பெரிய ஆலமரம் தான அவனது குடிசை — வீடு — அரண்மனை எல்லாம்! நல்லவேளை, அந்த மரத்தை இன்னும் வெட்டாமல் வைத்திருக்கிருர்கள். அதற்காக ராஜு தினம் தவருமல் பக்கத்திலிருந்த பள்ளிக்கூடச் சிறுவர்களுக்கு நன்றி தெரிவிக்கத் தவறமாட்டான். ஏன் என்கிறீர்களா? அந்தப் பள்ளியில் படிப்பவர்களோ பங்களா வீட்டுச் சிறுவர்கள். அவர்களுக்கு வெய்யிலின் வெப்பம் சிறிதளவும் தெரியக் கூடாதல்லவா? ஆகவேதான் அந்த மரத்திற்கு பூரண சுதந்திரம் கொடுத்து வளர்த்திருந்தார்கள். அது ராஜுவுக்கு மட்டுமல்ல; அவனைப் போன்ற ரிச்ஷாக்காரர்கள் பலருக்கு பலன் தந்துகொண்டிருந்தது.

"அட.. எங்கம்மா போயிட்டே... ஏ, வள்ளீ...!" — ராஜுதான் மறுபடியும் கத்தினன்.

"இதோ வர்ரேம்ப்பா! ..."–சாலையின் எதிர் புறத்தில் கொட்டியிருந்த மணல் மேட்டில் விளையாடிக் கொண்டிருந்த வள்ளி பதில் குரல் கொடுத்தாள். அப்பாவிடம் செல்லப் புறப்பட்டாள். சாலையிலே வரிசைவரிசையாக சென்றுகொண்டிருந்த மோட்டார்கள் அவளைத் தடுத்தன. அவளுக்கு ஆத்திரமாக வந்தது. "என்ன ...சனியன்கள்!" என்று முணுமுணுத்துக் கொண்டாள். நடுவில் சிறிது இடம் கிடைத்தது. பின்னலேயே மற்றுமொரு லாரி வந்து கொண்டிருந்தது. அதற்குள் இடையில் புகுந்து ஓடிவிட்டாள் வள்ளி. சாலையின் எதிர்புறத்தை அடைந்து விட்டாள். அங்கு நின்றுகொண்டு கையைத் தட்டிச் சிரித்தாள். லாரியை ஏமாற்றி குறுக்கே பாய்ந்து வந்துவிட்டதாக அவளுக்கு நினைப்பு — ஆகவேதான் சிரிப்பு!

"என்னம்மா சிரிக்கிறே? இந்தா கொஞ்சம் கஞ்சி வச்சிருக்கேன்... அதைக் குடி!" என்ருன் ராஜு. அவன் முகத்தில் புன்னகை தோன்றியது. என்னவோ தன் பெண்ணுக்கு 'பாதாம் அல்வா' வாங்கித் தந்துவிட்டதாக அவன் நினைத்தான்.

'கஞ்சி' என்ற சொல் காதில் பட்டதுதான் தாமதம்; 'குபீர்' என்று பாய்ந்தாள் வள்ளி! "நீ நல்லாயிருப்பேப்பா! பொழுது விடிஞ்சதிலேயிருந்து இன்னும் ஒன்னுமே சாப்பிடலே நான்! ஒரே பசி!..." என்று ஆசையுடன் சொல்லிக் கொண்டு கஞ்சிக் கலயத்தை வாங்கினுள்.

அதே சமயம், "வண்டி கொண்டு வரட்டுமா சாமி?" என்று கேட்டுக் கொண்டே அவசர அவசரமாக எழுந்தான் ராஜு. எதிர் புறத்திலிருந்த அலுவலகத்தின் வாசலில் அதன் நிர்வாகியைப் பார்த்து விட்டான் அவன். அவர் வாசலில் தோன்றினுல் 'ரிக்ஷா தேவை' என்று பொருளோ, என்னவோ! ராஜு அவர் சம்மதத்தைக்கூட எதிர்பார்க்காமல் வண்டியை இழுத்துக் கொண்டு புறப்பட்டான். பாவம், அவனுல் வண்டியை இழுக்கவே முடியவில்லை. உடம்பிலே தெம்பில்லை; ஆனுல் வயிற்றிலோ பசி! என்ன செய்வான் அவன்?... கலயத்தின் அடியிலிருந்த சிறிதளவு கஞ்சியையாவது சாப்பிடலாம் என்றுதான் உட்கார்ந்தான். ஆனுல் அந்த சமயத்திலா திடீரென்று வள்ளியின் நினைவு வந்து தொலைய வேண்டும்! அதையும் மகளிடம் தந்து விட்டுப் பசியுடன் புறப்பட்டான்.

அப்பாவின் தலை மறையுமட்டும் பார்த்துக் கொண்டிருந்த வள்ளியை பசி தூண்டி விட்டது, 'கையிலே கலயம்—கலயத்திலே கஞ்சி' என்று! வள்ளிக்கு அந்தக் கஞ்சியைக் கண்டது, கூடை நிறைய பழத்தைக் கண்டது போலிருந்தது. அவசர அவசரமாக கலயத்தை வாயருகில் கொண்டு போனுள்.

"வள்ளி!...வள்ளி!"—அந்த சமயத்தில் இப்படி அவசரமாக யாரோ அழைப்பது கேட்டது. வள்ளி திடுக்கிட்டு விட்டாள். நிமிர்ந்து பார்த்தாள். எதிரே அவளை நோக்கி ஓடி வந்து கொண்டிருந்தான் அவளது அண்ணன் பாலையா. அவனைப் பார்த்ததுமே வள்ளியின் முகம் 'குப்'பென்று மாறியது. "ஏண்டா! ஏன் இப்படி லாரியிலே அம்புட்டுக் கிட்டவன் மாதிரி கத்துறே? என்னுவாம்?" என்ருள் வெறுப்புடன்.

அவன் அவளது அண்ணன்தான்! ஆனுலும் வெறுப்புடன் பேசினுன். அவளுக்கு மட்டுமல்ல; அவனது அப்பாவுக்கும் அவன்மீது வெறுப்புதான்! காரணம், அவன் 'உருப்படாத பிள்ளை'யாம்! அதாவது அவன் அப்பாவையும் தங்கையையும் நினைக்கவே மாட்டான். ஏதாவது வேலை செய்வான். சம்பாதிப்பான். தன் விருப்பம்போல் செலவு செய்வான். சாப்பிடுவான். ஆனுல் கையில் காசில்லாவிட்டாலோ...ஆலமரத்தடிக்குத்தான் ஓடி வருவான்! அதனுல்தான் வள்ளியும் கோபமுடன்கேட்டாள், 'ஏண்டா வந்தாய்?' என்று!

"கலயத்திலே எதுனுச்சும் இருக்கா வள்ளி?"–பாலையா தயவாகக் கேட்டான். பாவம், அவனுக்கும் பசி போலிருக்கிறது!

"அதை ஏன் கேக்கிறே?" என்ருள் வள்ளி!

"தங்கச்சி! தங்கச்சி! நேத்தியே புடிச்சி எதுமே சாப்பிடலே தங்கச்சி! ஒரே பசி; மயக்கமாயிருக்கு; நடக்கவே முடியலே! எனக்குத் தாயேன்"–பாலையா கெஞ்ச ஆரம்பித்து விட்டான். கண்ணீரால் தங் கையிடமிருந்து கலயத்தைப் பறித்து விடலாம் என்பது அவனது எண்ணம். ஆனுல், வள்ளியோ இன்று அதற்கெல்லாம் இடம் கொடுப்பவளாக இல்லை; இரக்கத்திற்கே இடம் இல்லாமல் செய்து விட்டதே, வயிற்றைக் கிள்ளும் பசி!

"கிடையாது போ!...எனக்கு மட்டும் பசிக்காதோ!" என்று சீறினுள் அவள். பாலையாவின் முகத்தைப் பார்க்காமல் கீழே குனிந்து கொண்டாள். ஆனுலும் கண்கள் கேட்கின்றனவா? மெதுவாக அவனைப் பார்த்தன! அவன் முகத்தைப் பார்க்க பரிதாபமாக இருந்தது. ஆனுலும்... 'தங்கை' என்று அவனுக்கு இல்லாத அன்பு...'அண்ணன்' என்று அவளுக்கு மட்டும் வருவானேன்?— இப்படி யோசித்த வள்ளி கஞ்சியை குடிப்பதற்கு, கலயத்தை வாயருகில் கொண்டு போனுள்!

"வள்ளி...!" — இம்முறை பாலையாவின் குரலில் 'பாவம்' இல்லை; பயங்கரமான கோபம்தான் தோன்றியது!

வள்ளி அவனைப் பார்த்தாள். அப்பப்பா! அவன் முகத்தில்தான் எத்தனை ஆத்திரம்! கோபத்தால் சிவந்தே விட்டிருந்தது! "தரப்போறியா; இல்லியா?" "என்று கத்தினுன் இயற்கையான முரட்டுத்தனத்துடன்!

"மாட்டேன்! என்னடா செய்வே?" என்று பதிலுக்குக் கத்தினுள் வள்ளி!

"என்ன செய்வேனு? லாரியிலே அம்புட்டுகிட்டு செத்துப்போவேன் —ஆமா!" என்று உறுமினுன் அவன். அவனுக்கு ஒரே ஆத்திரம்! பொல்லாத கோபம்–பாழும் பசி— எதிரே கஞ்சி; இருந்தாலும் ஏமாற்றம் – இவை அவனை அப்படிப் பேச வைத்தன.

"செத்துப் போயேன்! எனக்கு என்னு வந்தது! உன் மிரட்டல் என்னை ஒன்னும் செய்யாது!" என்று அவனது குரலுக்கு ஈடாக வள்ளியும் கத்தினுள்.

பாலையாவுக்கு அதைக் கேட்டதும் இன்னும் கோபம் அதிகமாகிவிட்டது. "குரங்கே! இரு; இரு! உன்னைப் பாத்துக்கிறேன்!" என்று கத்தினுன். ஆத்திரமாக அவளைப் பார்த்தான். சாலையோரமாக வேக வேகமாக நடந்தான்.

அவன் போனதும் வள்ளிக்கு என்னவோ போலிருந்தது. என்ன இருந்தாலும் அண்ணன் அல்லவா— என்ற எண்ணம் தோன்றியிருக்கலமோ! இருக்கலாம்; இருக்கலாம்! இல்லாவிடில் அவள் எதற்காக வாயருகில் கொண்டுபோன கலயத்தை அப்படியே கையிலேயே வைத்திருக்கவேண்டும்? ஏன் ஓடி மறைந்து போன அண்ணனைத தேடித் தேடி கண்களை சுழலவிட வேண்டும்?

சற்று நேரம் சென்றது. அவன் திரும்பி வருவான் என்று எதிர்பார்த்தாள் வள்ளி. ஆனுல் அவன் வரவில்லை; வள்ளிக்கு வருத்தம்தான்!

அதே சமயத்தில் சற்றும் எதிர் பாராத வண்ணம் ஒரு பயங்கர அலறல் கேட்டது; 'கிறீச்'சென்ற சப்தம் எழுந்தது. மறுகணம் சாலையில் நடந்துகொண்டிருந்தவர்கள் குறிப்பிட்ட இடத்தை நோக்கி தலை தெறிக்க ஓடினுர்கள். வள்ளிக்கு ஒன்றுமே புரியவில்லை. அதற்குள், சாலையில் சென்றுகொண்டிருந்த மோட்டார் வண்டிகள் அனைத்தும் நின்றுவிட்டன. "என்ன?... என்ன?" என்று பதறினுள் வள்ளி! அவளுக்கு பதில் சொல்ல யாரும் முன் வரவில்லை; அவசர அவசரமாக அவரவர்கள் ஓடிக்கொண்டிருந்தார்கள். வள்ளிக்கு குழப்பம் அதிகமாகி விட்டது. அப்போது இருவர் பேசிக் கொண்டு சென்றது அவள் காதுகளில் விழுந்தது.

"யாரோ ரிக்ஷாக்காரச் சிறுவன் மாதிரிதான் இருக்கு...அப்பப்பா! எப்படியப்பா சொல்வது? பையன் ஓடிக்கிட்டே யிருந்தான், லாரி வந்தது தெரியாமே! அவ்வளவுதான்! ...தலை சின்னுபின்னமாயிட்டு... அய்யோ...யார் பெத்த பிள்ளையோ...?"

அதற்குமேல் வள்ளியால் கேட்க முடியவில்லை. 'அய்யோ! பாலையா!' என்று கத்தினுள். அந்தக் குறிப்பிட்ட இடத்தை—விபத்து நடந்த இடத்தை நோக்கி ஓடினுள்.

அந்த இடத்திலே ஒரே கூட்டம்! "பேய், மாதிரியில்லே போருனுவ லாரிக்காரனுவோ!"

"பையன் தலை நொறுங்கிப் போச்சே! அதைப் பார்த்ததும் லாரிக்காரனும் தப்பிச்சுட்டான்...!".

—இப்படிப் பலப்பல அபிப்பிராயத்தைச் சொல்லிக் கொண்டிருந்த கூட்டத்தை விலக்கிக் கொண்டு உள்ளே நுழைந்தாள் வள்ளி.

கூட்டத்தின் மத்தியிலே...என்ன கோரம்! இரத்தைக் குட்டை— தூள் தூளாகி விட்ட தலை—அடையாளம் காணமுடியாத உடல்! வள்ளி பார்த்தாள்! பாலையா உடுத்தியிருந்த நீலநிறக் கால் சட்டை! நிறம் புரியாதபடி இரத்தத்தால் சிவந்துபோன மேல்சட்டை! "ஐயோ, அண்ணு!" என்று அலறியபடியே அந்த பிணத்தின் மேல் பாய்ந்தாள் வள்ளி!

ஆனுல் அதே சமயம் பின்னுலிருந்து அவள் கையைப் பிடித்து யாரோ இழுத்தார்கன்! வள்ளி திரும்பினுள். என்ன ஆச்சரியம்! ததும்பிநின்ற கண்ணீரால், பார்வை குறைந்திருந்த கண்களை கசக்கி விட்டுக் கொண்டு பார்த்தாள்! மறுகணம், கீழே கிடந்த லாரிக்கு இரையான பிணத்தைப் பார்த்தாள். மீண்டும் மாறி மாறிப் பார்த்தாள். மறுகணம் "அண்ணு" என்று அலறினுள்! ஆமாம், அவள் எதிரே நின்றது பாலையாவேதான்!

"அண்ணு! நீ இல்லியா இது? நான் துடிச்சுப் போனேன்!" என்ருள். அவனை அணைத்துக் கொண்டாள்.

ஆனுல் பாலையாவின் முகத்தில் பழைய கோபம் அப்படியே இருந்தது. வள்ளி அவன் கையைப் பிடித்துஇழுத்தாள். "வா, அண்ணு!

★ தொடர்ச்சி 10–ம் பக்கம்

கடைசிப்பக்கம்
எழுத்தாணி

இந்த வாரம் பரிசு பெறும்
தோழர் :
(●) ஏ. எல். நாதன்.
15, நடுத் தெரு, லட்சுமிபுரம்

தயா. ஜெயபால்; காரமடை.

(?) எழுத்தாணியாரும். நேருவும் சந்தித்தால்...?

ஆதிக்க வாதிகளைச் சந்தித்து எழுத்தாணி வர்க்கம் தலை குனிந்ததாகக் கட்டுக்கதைகூட கிடையாதே!

மு. தமிழ் நெஞ்சன், புதுப்பேட்டை.

(?) கும்பகோணம் கும்பமேளா திருவிழாவில். காமராசரும். ஆச்சாரியாரும் கலந்து கொள்வாரா?

நிர்வாணச் சாமியார் கூட்டத்திலே தேடிப்பாருங்கள்!

பி. மாரிமுத்து; சேண்பகராய கல்லூர்.

(?) ஆசியாவின் ஜோதி அணைந்து விட்டால்...?

காங்கிரஸ் கோட்டையில் இருப்போருக்குக் கண் தெரியாது!

எஸ். கே. குத்தூஸ், ஈரோடு

(?) நெப்போலியனின் உயரம் எவ்வளவு?

அவன் உண்டாக்கிய பிணமலையில் லட்சத்தில் ஒரு பங்கு இருக்கும்!

(?) விடுதலைப் படை பெறும் முதல் பரிசு எது?

எதிர்ப்பும், ஏச்சும்!

இரா. கோதண்ட ராமன்; சென்னை—10

(?) 1953ல் பர்மா சட்டசபை நடக்கும்போது அவுங்சான் போன்ற மந்திரிகளைச் சுட்டு விழ்த்தினர்களே; அதுபோல் தற்போது தமிழகத்தில் நடந்தால்?

சே! சே! அப்படியெல்லாம் நடப்பதற்கு தமிழர்கள் இருதயமில்லாதவர்களுமல்ல; இந்த மாநிலத்து மந்திரிகள் அவுங்சான் அளவுக்குப் புகழ் பெற வேண்டிய பாத்திரங்களுமல்ல!

நா. அரசுமணி; ஈரோடு.

(?) காமராசர் ஒரு பாம்பாட்டி. பெரியார் ஒரு பாம்பு என்கிறேன் நான். நீர் என்ன சொல்கிறீர்?

அப்படியானால் பாம்பாட்டியை பாம்பு கடிக்காது என்று யார் சொன்னார்கள்?

கு. பா. வேணுகோபால்; இளம்பிள்ளை.

(?) சன்னியாசிகளின் உலகத்திற்கும். நமது உலகத்திற்கும். உள்ள வேறுபாடு என்ன?

மறைமுகமாக அவர்கள் உலகத்தில் கிடைக்கும் சுகம் வெளிப்படையாகக்கூட மற்றவர்களுக்குக் கிடைப்பதில்லையே!

அண்ணல்தங்கோ; பூசாரிப்பட்டி

(?) இலட்சிய வீரனின் மரண சாசனத்தில் எது முதலிடம் பெறும்?

காதல்—மொழியின் மீது; நாட்டின் மீது; இனத்தின் மீது!

கு. இரா. பரமசிவன்; காரமடை.

(?) நிர்வாணச் சாமிகள் உம்மை பேட்டி காண வந்தால் அவர்களிடம் என்ன சொல்வீர்?

ஆடைப் பஞ்சம் போக்குவதற்கு அவர்கள் காட்டிய உதாரணத்திற்காக 'பாரதரத்னா' பட்டம் கிடைக்க இந்திய சர்க்காரிடம் சிபார்சு செய்வேன்!

(●)ஏ.எல். நாதன், லட்சுமிபுரம்.

(?) ராஜேந்திர பிரசாத் ஏன் இப்போது லட்சத்தீவுகளுக்கு போயிருக்கிறார்?

சமயம் வந்தால் 'தேசிய சியாங்கு'கள் ஒளிந்து கொள்ள அந்தத் தீவுக் கூட்டம் பார்மோசாவாகப் பயன்படுமா? என்று பார்த்து வருவதற்காக!

சீரிவாசன்; ஆற்காடு.

(?) சாப்பிட்டவுடன் எனக்கு தூக்கம் வந்து தொலைகிறதே: என்ன செய்வது?

பயப்படாதீர்; நீர் விரைவில் பார்லிமெண்ட் அங்கத்தினராகப் போகிறீர்!

க. இராமசாமி; சேமனூர்.

(?) காங்கிரஸ் என்றால் என்ன?

இந்தியாவைப் பொறுத்தவரையில் அது ஒரு வாழ்ந்துகெட்ட குடும்பம்; காட்சி மேடையில் தொங்க வேண்டிய எலும்புக் கூடு!

(?) கிண்டியில் என்ன இருக்கிறது?

குதிரை லாயம்; கவர்னர் மாளிகை—இரண்டுமே பயனற்றவை!

என். சோமசுந்தரம்; சிவகாசி

(?) சர்வாதிகாரம் முடிவில் என்ன ஆகும்?

சமாதியில் சதிராடும்!

ஆனமுத்து; குறவைக்குளம்.

(?) குயிலுக்கு அதன் குரலோடு மயிலின் அழகும் கிடைத்து விட்டால்?

பெண்களை வர்ணிப்பதில் ஒரு வார்த்தை குறைந்துவிடும்!

வடசென்னை சர்வகட்சிக் கூட்டணி.

தமிழகத்தின் எல்லையைப் பாதுகாப்பதற்காக, நாட்டிலுள்ள சர்வகட்சிகளின் தலைவர்கள் ஒன்று கூடி 20—2—56 அன்று தமிழகம் முழுவதும் கடையடைப்பும், பொது வேலைநிறுத்தமும் செய்ய வேண்டுமென்று முடிவு செய்திருப்பதை, வெற்றியுறச் செய்யவேண்டி, வட சென்னையிலுள்ள – தமிழரசுக் கழகம், கம்யூனிஸ்ட்கட்சி, பிரஜா சோஷியலிஸ்டுக் கட்சி, சோஷியலிஸ்டுக்கட்சி, தமிழர் பேரவை, ஆதி திராவிட மகாஜன சங்கம், திராவிட முன்னேற்றக் கழகம் ஆகிய அமைப்புக்களின் பிரதிநிதிகள் 8-2-56, புதன் இரவு 9 மணிக்கு வட சென்னை பொது நலசீர்திருத்த மன்றத்தில் ஒன்று சேர்ந்து—ஒவ்வொரு அமைப்புக்களிலிருந்தும், ஒவ்வொரு பிரதிநிதிகள் கொண்ட செயற் குழு அமைக்கப் பட்டது. குழுவின் கன்வீனராக தோழர் கே. எம். கண்ணபிரான் அவர்கள் (தி. மு. க.) தேர்ந்தெடுக்கப் பட்டார்.

வடாற்காடு மாவட்ட தி. மு. கழக கூட்ட அழைப்பு

அன்புடையீர்,
வணக்கம். 12-2-56 மாலை 2-மணிக்கு, திருப்பத்தூரில் வழக்கறிஞர் திரு. சுவாமி நாயுடு அவர்கள் இல்லத்தில், வ. ஆ. மா. தி. மு. கழகக் கூட்டம் நடைபெறும், அதுசமயம் 20-ந்தேதி நடைபெறவிருக்கும் பொதுவேலை நிறுத்தம் பற்றியும், உறுப்பினர்கள் சேர்த்தல் பற்றியும் ஆலோசிக்கப்படும். உறுப்பினர்கள் தவறாது வருகைதர வேண்டுகிறேன்.

அன்பன்,
முல்லை-சத்தி

நாவலுலகில் புதிய பாதை!
தித்திக்கும் தமிழில்,
"திராவிட நாடு" துணை ஆசிரியர்.
இராம. அரங்கண்ணல்
தீட்டிய
'கடிகாரம்'
வெளி வந்து விட்டது.
—: விலை ரூ. 1—12—0 :—
எழில் நிலயம், பெண்ணாடம், தெ. ஆ.

★ தென்னகத்து முக்கலையின் வைரத் தொட்டில்!
●
எழுச்சிக்கு வித்திடும் —'பவனி'
டைரக்டர் கிருஷ்ணன் பஞ்சுவின்
'படவுலகில் டைரக்டர்' [தொடர் கட்டுரை]
வரப்போகும் புதுப் படங்களுக்கு — 'பராக்!'
திரையுலகத்து புதிய செய்திகள் — 'தெரியுமா?'
கலைத்துறை ஏடுகளுள் புது முயற்சி — 'கால்ஷீட்!'
இன்னும் எத்தனையோ—அத்தனையும் உண்டு!
பக்கத்துக்குப் பக்கம் படங்கள்
'வெள்ளி வீதி'
மூன்றாவது இதழ் விற்பனையாகிறது!
'வெள்ளி வீதி' 28-3 கிராம்ஸ் ரோட், நுங்கம்பாக்கம், சென்னை-6.

ஆசிரியரும், அச்சிடுபவரும், வெளியிடுபவரும் மு. கருணாநிதி. 'முரசொலி' அச்சகம். 4/128. மவுண்ட் ரோடு, சென்னை-2